Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 112 சுபகிருது வருடம், கார்த்திகை மாதம் 09ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(25.11.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் ஆகிர் - 30, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60



## உஷ்



அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் தனக்கு ஆதரவை வழங்கும் என்று கொழும்பிலுள்ள முக்கியமான நாடொன்றின் தூதுவரிடம் கூறியுள்ளாராம் ரணில்.

அதற்கு முன்னர் தமிழ், முஸ்லிம் மக்களின் முக்கியமான பிரச்சினைகளை தீர்க்க முன்னுரிமையளிக்கவுள்ளதாகவும் கூறியுள்ளாராம்.

# அராஜகத்தை அடக்குவேன்!

## அச்சுறுத்தல் வருமாயின் படையினர் அமைதியாக இருக்கமாட்டார்கள் என்கிறார் ஜனாதிபதி ரணில்



(நா. தினுஷா)

மனித உரிமைகள் என்ற போர்வையில் வன்முறை மற்றும் அராஜகங்களுக்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்கான முயற்சியில் ஈடுபடும் எத்தரப்பினரையும் முற்றாக ஒடுக்குவதற்கு பாதுகாப்புப் படை பயன்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

இவ்வாறான சூழ்நிலையில், இராணுவத்தின் கீழ்நிலை அதிகாரி முதல் பீல்ட் மார்ஷல்வரை அனைவரும் தமது பொறுப்பை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளனர் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரை யாற்றிய ஜனாதிபதி...

02 பக்கம்

## மலேஷிய பிரதமரானார் அன்வர் இப்ராஹிம்

10 பக்கம்

## தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும் ரணிலின் முயற்சிக்கு ஆதரவு

### சபையில் அறிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

அடுத்த ஆண்டு சுதந்திர தினத்துக்கு முன்னர் தமிழர் பிரச்சினைக்கு யதார்த்த ரீதியாக தீர்வு வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சித்தால் அதற்கு ஆதரவு...

02 பக்கம்

## நல்லெண்ண சமிக்ஞை இராணுவத்திடம் இல்லை

### காணி சுவீகரிப்பு தொடர்பில் சார்ள்ஸ் எம்.பி. சபையில் குற்றச்சாட்டு

(ம.சுசிகலா)



கோட்டாபய கடற்படை முகாம் தொடர்பான தெளிவான விடயத்தை வெளிப்படையாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், கடற்படைத் தளபதி கதைப்பதற்கு தயாராக இருந்தால் மக்கள் சார்பாக நான் கதைப்பதற்கு தயாராக இருக்கிறேன். ஆனால், அங்கு எந்தவிதமான நல்லெண்ண சமிக்ஞையும் இருந்ததாகத் தெரியவில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன்...

02 பக்கம்

## ஆளுநருக்கு சம்பளம் ரூ. 04 இலட்சம்

(நா. தினுஷா)

தவறான பிரசாரங்களை நம்பி ஒருசில அரசியல்வாதிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தனது மாத வருமானம் தொடர்பில் பல்வேறு தவறான கருத்துகளை வெளியிட்டு வருகிறார்கள். ஆனால், தனக்கு மாதாந்தம் 4 இலட்சம் ரூபாவே ஊதியமாக கிடைப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர்...

02 பக்கம்

## வடக்கு - கிழக்கு இணைந்த சமஷ்டியை வலியுறுத்த முடிவு

### சம்பந்தன் தலைமையில் கூடிய கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவில் தீர்மானம்

(நமது விசேட செய்தியாளர் )

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க டிசம்பரில் அழைக்கும் கூட்டத்தில், வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்துக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வை வலியுறுத்த வேண்டுமென்று நேற்றுமுன்தினம் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பியின் தலைமையில் அவரது வீட்டில் கூடிய கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழு தீர்மானித்தது.

நீண்ட காலத்தின் பின்னர் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு சம்பந்தன் தலைமையில் நேற்று முன்தினம் மாலை கூடியது.

02 பக்கம்

## தவறான நிர்வாகத்துக்கு மக்கள் பொறுப்பல்ல!

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவிப்பு

(கே.சுபானி)

அமைதியான முறையில் எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமை உட்பட மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்காமல், தவறான நிர்வாகத்திற்கோ அல்லது ஊழலுக்கோ இலங்கையர்களை பொறுப்புக்கூற முடியாது என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியாவுக்கான பணிப்பாளர் மீனாட்சி கங்குலி நேற்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் கடனை மறுசீரமைப்பது தொடர்பில் கடன் வழங்குநர்கள் விரைவில் பதிலொன்றை வழங்காவிட்டால், மில்லியன் கணக்கான மக்களின் வாழ்க்கை அபாயத்தை எதிர்நோக்கலாம்.

இலங்கையின் பிரதான கடன் வழங்குநர்களான சீனா, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் விரைவில் கடன் மறுசீரமைப்பிற்கு ஆதரவு வழங்குவதன் மூலமாக பொருளாதார நெருக்கடியால் ஏற்படும் மனித உரிமை மீறல்களை குறைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## இவ்வாண்டு 429 பேருக்கு எச்.ஐ.வி.

(கே.சுபானி)

நாட்டில் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான 429 பேர் இவ்வாண்டு அடையாளங் காணப்பட்டுள்ளதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் ஆலோசகரும் மருத்து வருமான ஜானக வேரகொட தெரிவித்தார். இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது மூவாயிரத்து 600 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகியுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளாரென சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில்...

02 பக்கம்



## கோட்டா ஆட்சிக்காகவே ஈஸ்ரர் தின தாக்குதல்கள்

### மைத்ரியும் பொறுப்புக் கூற வேண்டுமென்கிறார் சந்திரிகா

(நா.தினுஷா)

“கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்காகவே உயிர்த்த ஞாயிறு தினத் தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமை அனைவருக்கும்...

02 பக்கம்

## ‘ஐஸ்’ வைத்திருந்தால் மரண தண்டனை

### அமுலுக்கு வந்தது சட்டம்

(கே.சுபானி)

ஐந்து கிராம் ‘ஐஸ்’ போதைப்பொருளை வைத்திருக்கும் எவருக்கும் மரணதண்டனை வழங்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்துக்கு உள்ளதாக நீதி மற்றும் சிறைச்சாலைகள் விவகார இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன...

02 பக்கம்

## இலங்கை அகதி வியட்நாமில் தற்கொலை

(கனகராசா சரவணன்)



கனடாவுக்கு செல்லும் நோக்கில் தென் சீனக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தபோது மீட்கப்பட்டு வியட்நாமில் அகதியாக தங்கவைக்கப் பட்டிருந்த ஒருவர் தற்கொலைக்கு முயற்சித்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி...

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...

மக்கள் நடத்தின போராட்டமெல்லாம் மறந்துபோச்சுதுபோல ரணில் ஐயாவுக்கு...!



## கிரிக்கெட் அதிகாரிகளுக்கு தலா 800 அமெ. டொலர்

### ஆஸி.யில் ஒரு மாதத்துக்கு மேலாக நாளாந்தம் செலுத்தப்பட்டமை அம்பலம்

(த.யுவராஜ்)

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் கலந்துகொள்வதற்காக ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் அனுசரணையில் சென்ற அதிகாரிகளுக்கும் அதிகாரிகள் அல்லாத தரப்பினருக்கும் நாளாந்தம் 800 அமெரிக்க டொலர் வீதம் வழங்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

02 பக்கம்



## சாணக்கியன் தீவிரவாதி: மஹிந்தானந்த சாடல்!

02 பக்கம்

## காசல் வைத்தியசாலைக்கு மின் துண்டிக்கப்படும் நிலை

### ரூ. 03 கோடி நிலுவையில்

(ம.சுசிகலா)

காசல் மகளிர் வைத்தியசாலையில் நிலுவையிலுள்ள 3 கோடி ரூபாவுக்கும் அதிகமான மின்சாரக் கட்டணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறினால் தொடர்ச்சியாக குறித்த வைத்தியசாலைக்கு மின்சாரத்தை வழங்க முடியாத ஆபத்தான சூழ்நிலை நிலவுவதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த நிலுவைத் தொகை தொடர்பான நினைவூட்டல் கடிதங்களை வைத்தியசாலை பணிப்பாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பவும் இலங்கை மின்சார சபை...

02 பக்கம்

## அராஜகத்தை...

ரணில் விக்கிரமசிங்க இந்த விடயங்களை தெரிவித்தார்.

ஜனாதிபதி அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,

அரசாங்கங்கத்தைக் கவிழ்க்க வரும்போது இராணுவம் ஒதுங்கி நிற்க முடியாது. எமது மகாநாயக்க தேரர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும்போது எம்மால் அமைதியாக இருக்க முடியாது. அரசியலமைப்பின் 09 ஆவது சரத்தின் பிரகாரம் அவர்களைத் தடுக்கும் அதிகாரம் இராணுவத்தினருக்கு உண்டு. இதுபோன்ற வன்முறைச் செயல்களுக்கு இடமளிக்க முடியாது. மதகுருமாரை வைத்து குழப்பத்தை ஏற்படுத்துவதை நிறுத்தவேண்டும். இதை அனுமதிக்க நான் ஒருபோதும் விரும்பவில்லை.

இன்று சில தேரர்களை முன்னிறுத்தி போராட்டங்களை நடத்துகின்றனர். பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றனர். தேரர்களுக்கு மதச் செயல்பாடுகள் உண்டு. அந்த நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட வேண்டும். இதில் பொதுமக்கள் ஈடுபடுகிறார்கள் என்பது வேறு விடயம்.

ஒரு பல்கலைக்கழக மாணவர் கூட தடுப்புக்காவலில் இல்லை என்பதை கல்வி அமைச்சருக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன். வசந்த முதலிகே 8-9 வருடங்களாக பல்கலைக்கழக மாணவர். நான் 21 வயதில் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறினேன். முதலிகேவுக்கு வயது 31 என்றாலும் அவர் இன்னும் பல்கலைக்கழக மாணவரே. ஒரு மாணவருக்கு ஒரு வருடமே மேலதிகமாக வழங்க முடியும். அதன் பிறகு நீங்கள் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேற வேண்டும்.

நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். நானும் மனித உரிமைகளை பாதுகாக்க விரும்புகிறேன். அராஜகமும் வன்முறையும் மனித உரிமைகளை ஆக்கிரமிக்க அனுமதிக்க முடியாது. மனித உரிமைகளைப் பயன்படுத்தி வன்முறை மற்றும் அராஜகத்தை உருவாக்கவும் முடியாது. மனித உரிமைகள் என்ற பெயரில் வன்முறையை ஏற்படுத்துபவர்களை பாதுகாக்க முடியாது.

மனித உரிமைகளை காப்பவர்கள் நாங்கள் என்று ஒரு சிலர் இன்று கூறுகிறார்கள், அவர்கள் என்ன செய்தார்கள்? குறைந்தபட்சம் இவற்றை நாம் நடைமுறையில் செய்துள்ளோம். நாங்கள் சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவியுள்ளோம்.

இப்போது மனித உரிமை என்ற போர்வையில் பொலிஸ் அதிகாரிகளை கைதுசெய்ய முயல்கிறார்கள். பொலிஸார் மனித உரிமைகளை மீறியிருக்கலாம். அவ்வாறு செய்தவர்கள் இருந்தால் அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுப்போம்.

அவசரகாலத்தை உருவாக்கி, கலவரம் போன்றவற்றை ஏற்படுத்தி, அதை தடுக்க பொலிஸாரிடம் செல்லும்போது, பொலிஸார் மீது மனித உரிமை வழக்குகள் தொடரப்படுகின்றன. இது மனித உரிமைகளுக்காக செய்யப்படுவதில்லை, மாறாக பொலிஸாரின் தலையீட்டை நிறுத்துவதற்காகவே முன்னெடுக்கப்படுகின்றன. எனவே, இது தொடர்பில் ஆராயுமாறு நான் சட்டமா அதிபரிடம் கூறினேன்.

அப்படி செய்தால் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். இந்த விளையாட்டை எப்போதும் தொடர அனுமதிக்க முடியாது.

இராணுவ அதிகாரியாக இருந்தாலும் சரி, பொலிஸ் அதிகாரியாக இருந்தாலும் சரி, அனைவரையும் நாம் பாதுகாக்க வேண்டும் என்றார்.

## ஆளுநருக்கு...

கலாநிதி பீ.நந்தலால் வீரசிங்க நேற்று (24) கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலிருக்கும் பொறுப்புமிக்க அரசியல்வாதிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தவறான பிரசாரங்களை நம்பி, அதனை உண்மைபோன்று பிரசாரப்படுத்துவது தொடர்பில் நான் கவலையடைகிறேன். சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து ஓய்வூதியம் எதுவும் எனக்கு கிடைக்கவில்லை.

எனக்கு முன்னர் பதவியிலிருந்த மத்திய வங்கி ஆளுநர், அவர் பதவிக்குத் தெரிவானபோது ஒரு இலட்சத்து 50 ஆயிரமாக இருந்த மத்திய வங்கி ஆளுநரின் மாத வருமானத்தை 4 இலட்சம் ரூபா வரையில் அதிகரித்துக் கொண்டார். அமைச்சரவைக்குரிய பதவியாக உயர்த்திக்கொண்டு வரி செலுத்துபவர்கள் மற்றும் திறைசேரி நிதியில் தனியான பணியாளர் பிரிவு மற்றும் பாதுகாவலர்களை நியமித்து கொண்டுள்ளார்.

ஆனால், எனக்கு அந்தளவு பாதுகாப்பு எதுவும் அவசியமில்லை. எனக்குரிய மாத வருமானம், உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் வாகனம் என்பவற்றை மாத்திரமே நான் பெற்றுக்கொண்டுள்ளேன். மத்திய வங்கி ஆளுநர் பதவியிலிருந்து விலகியதும் ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்பு கூட எனக்கில்லை. பொதுவாக அரச அதிகாரியொருவர் 10 வருடங்கள் சேவையாற்றியிருந்தால் மாத்திரம் ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்வதற்கான உரிமை இருக்கிறது.

எனக்கு முன்னர் இருந்து மத்திய வங்கி ஆளுநருக்கு நாட்டில் பொருளாதாரத்துக்கு என்ன நடந்துள்ளது என்ற புரிந்துணர்வு இருந்ததா இல்லையா என்பது தொடர்பில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆனால், பாதுகாப்பு தொடர்பில் அவருக்கு பெரும் புரிந்துணர்வு இருந்துள்ளது என்று சுட்டிக்கட்டினார்.


திகதி 23.11.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4948
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.10,007,010.00
ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 3 6 3 2 3 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,458,114.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3190
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.67,275,615.60
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 23 49 56 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.60,000,000.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 1403
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,062,280.00
வெற்றி இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 4 4 9 2 6 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,118,274.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 978
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,838,980.00
வெற்றி இலக்கினம் M வெற்றி இலக்கங்கள் 09 11 41 63
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 133,964,225.60

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 257
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.8,919,860.00
இலக்கினம் கடகம் வெற்றி இலக்கங்கள் 27 42 47 48
விசேட இலக்கினம் கடகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,544,381.00

கோடி 28+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1296
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.3,380,200.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.281,933,718.00
ஆங்கில எழுத்து X சுப்பர் நம்பர் 23 வெற்றி எண்கள் 42 50 60 77
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01


# தமிழ்க் கட்சிகள் இன்று கூடல்

## ஜனாதிபதியின் அழைப்பு குறித்து ஆராய்வு

(நா. தினுஷா)

தமிழர் பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக தமிழ்க் கட்சிகளுக்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளமை தொடர்பில் ஆராய்வதற்கு தமிழ்க் கட்சிகள் இன்று கொழும்பில் கூடவுள்ளன.

ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பில் இன்று (25) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் இன்று இடம்பெறவுள்ள தமிழ்க் கட்சிகளுடனான கலந்துரையாடலில் ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைகள் குறித்துப் பேசவுள்ளோம். தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவே இந்த அழைப்பை விடுத்துள்ளார். பிரதானமாக நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதான மூன்று கட்சிகள் பங்குபற்றவுள்ளன. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலின்போது ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைகள் தொடர்பான ஒருமித்த கருத்தொன்றை பெற்றுக்கொள்ளலாம் என்று எதிர்பார்க்கிறோம். அதேபோன்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவளித்து ஒத்துழைப்பார்கள் என்றும் இணையக் கலந்துரையாடலில் பங்குபற்றுவார்கள் என்றும் நம்புகிறோம் என்றார்.

## சாணக்கியன்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தீவிரவாதி என்று சபையில் நேற்று (24) மஹிந்தானந்த அளுத்கமகே எம்.பி. சாடினார்.

சபையில் பேசும்போது, படையினர் ஆளுங்கட்சியினரால் அவமதிக்கப்படுவது குறித்து சாணக்கியன் எம்.பி சுட்டிக்காட்டி பேசினார். படையினரே இவற்றை தன்னிடம் கூறியுள்ளதாகவும் சாணக்கியன் குறிப்பிட்டார்.

அதற்குப் பதிலளித்த மஹிந்தானந்த எம்.பி . "எமது படையினர் தீவிரவாதியான உம்மிடம் விடயங்களை சொல்வார்களா? நீர் ஒரு தீவிரவாதி" என்று சாணக்கியனை நோக்கி குறிப்பிட்டார்.

## இவ்வாண்டு...

கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் 411 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகியுள்ளதாக அடையாளம் காணப்பட்டனர்.

எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதி உலக எய்ட்ஸ் தடுப்பு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனை கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்ட ஆண்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட எச்.ஐ.வி. பரிசோதனையின்போது, ஐந்து ஆண்களுக்கு ஒரு பெண் மாத்திரமே தொற்று பாதிப்புடையோராக கண்டறியப்பட்டிருந்து. ஆனால், இவ்வாண்டு நவம்பர் மாதத்திற்குள் 7ஆண்கள் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன் ஒரு பெண் பாதிக்கப்பட்டுள்ளார்.

நோயின் ஆரம்பத்தை கண்டறிய பரிசோதனைகளை அதிகரிக்க வேண்டும். அத்தோடு நோய் அறிகுறிகள் தென்படுமாயின் ஆரம்ப நிலையிலேயே நோயைக் கட்டுப்படுத்த தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

## நல்லெண்ண சமிக்ஞை...

சபையில் நேற்று (24) தெரிவித்தார்

வரவு - செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு 410 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. தற்போது நாட்டில் நெருக்கடி நிலையால் அரச நியமனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதியில்லை. வைத்தியசாலை, பாடசாலை, விவசாயிகள் மற்றும் கடற்றொழிலாளர்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத நிலையில் இலங்கையின் பொருளாதார நிலை இருக்கிறது. கடந்த வருட வரவு -செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு 373.05 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட நிலையில் கடந்த வருடத்தை விட 36.95 பில்லியன் ரூபா மேலதிகமாக இவ்வருடம் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இது இலங்கையின் பொருளாதார நிலைமையை மேலே கொண்டு வருவதற்கான சிறந்த திட்டம் அல்ல. இராணுவத்துக்காக 410 பில்லியன் ரூபா ஒதுக்குவது இலங்கையில் சிறந்த பொருளாதாரக் கொள்கை இல்லையென்பதையே காட்டுகிறது. இராணுவக் கொள்கையில் இராணுவத்தோடு ஆட்சியாளர்கள் பயணிக்க வேண்டிய எழுதப்படாத விதியில் நாடு சென்றுகொண்டிருக்கிறது. இது பொருளாதாரத்துக்கு மிகவும் ஆபத்தானது.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்றதற்கு பின்னர் தொடர்ச்சியாக இராணுவத்தினர் பல ஏக்கர் நிலங்களில் நிலைகொண்டிருந்தார்கள். தற்போதும் கூட அதே நிலங்களில் இருப்பதுடன் சில இராணுவ முகாம்கள் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக மன்னார் மாவட்டத்திலுள்ள விடுகல் தீவு இராணுவப் பயிற்சி முகாம் வனத்துறை திணைக்களத்திடமிருந்து 400 ஏக்கர் பெற்றுக்கொண்டதாக நிலைகொண்டுள்ளனர். ஆனால், தற்போது 1500 ஏக்கருக்கு அதிகமான நிலங்களை அபகரித்து வைத்துள்ளனர். யுத்தம் நடைபெற்ற காலத்தில் கூட இந்த இராணுவ முகாம் இருக்கவில்லை. யுத்தத்தின் பின்னர் புதிதாக அமைக்கப்பட்ட இந்த இராணுவ முகாம் 1500 ஏக்கர் நிலங்களை கொண்டுள்ளது.

நில அளவைத் திணைக்களத்தை பிரதேச செயலாளர் அல்லது மாவட்ட செயலாளர் ஊடாக தொடர்பு கொண்டால் அதிகாரிகள் இராணுவ முகாமை நாம் எப்படி அளப்பது என்ற அச்ச உணர்வில் உள்ளனர். இதேபோல முல்லைத்தீவு மாவட்டத்தில் வட்டுவாகல் பிரதேசத்திலிருக்கும் கோட்டாபய கடற்படை முகாம் யுத்தத்திற்கு பின்னர் அமைக்கப்பட்டது. தற்போது 671 ஏக்கர் நிலத்தை கோட்டாபய கடற்படை முகாம் வைத்துள்ளது. அந்த 671 ஏக்கர் நிலப்பகுதிக்குள் அரச காணிகள் இருக்கின்றன. தனியார் காணிகள் இருக்கின்றன. மக்களுக்கு பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட காணிகளும் இருக்கின்றன.

இதே போலவே வட மாகாணத்தில் மக்களுடைய விவசாயக் காணிகளை இராணுவம் அபகரித்து விவசாயம் மேற்கொண்டு சந்தைப்படுத்துகின்ற நிலை இருக்கிறது. மயிலிட்டி பிரதேசத்தில் மக்கள் 1991ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து இன்றுவரை சொந்த இடங்களுக்கு செல்ல முடியாதுள்ளனர். பலாலி இராணுவ முகாமின் விஸ்தரிப்புக்குள் இவர்களது நிலங்கள் உள்ளன. மருதனார் மடம் சந்தைக்கு பலாலி இராணுவ முகாமிலிருந்து ஒரு நாளைக்கு 3000 ஆயிரம் கிலோ தக்காளியை சந்தைப்படுத்துகின்றனர். அங்குள்ள விவசாயிகளுக்கு விவசாயம் செய்ய காணியில்லை. விவசாயிகளின் சொந்த காணியில் இராணுவம் விவசாயம் செய்கிறது. யுத்தத்துக்கு பின்னர் மக்களது காணிகளை வழங்க ஏன் இராணுவம் பின்னிற்கிறது? ஜனாதிபதி உட்பட ஆட்சியாளர்கள் இராணுவத்திற்கு கட்டளையிடுகின்ற அதிகாரத்தில் இல்லை என்றார்.

## ஐஸ் வைத்திருந்தால்...

நேற்று (24) தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐஸ் போதைப்பொருள் தொடர்பில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் குறித்த நபர், (ஏப்ரல் 23) அமுலுக்கு வந்த 2022 ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க, அபின் மற்றும் ஆபத்தான மருந்துகள் (திருத்தம்) சட்டத்தின் கீழ் மரணதண்டனையை எதிர்கொள்ள நேரிடும்.

இதேவேளை, ஐந்து கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைதாகும் பாடசாலை மாணவர்களை தடுப்பு முகாம்களுக்கு அனுப்பி வைக்கலாம். எவ்வாறாயினும் இவ்வாறான சந்தர்ப்பத்தில் உயர்நீதிமன்றமே முடிவெடுக்கும்.

எதிர்கால சந்ததியினரை பாதுகாப்பதற்காகவும், நாட்டை சரியான பாதையில் செலுத்துவதற்காகவும் இந்த திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. எனினும், அது முடியாவிட்டால் பயனெதுவும இல்லை.

இதுதொடர்பில் பெற்றோர்கள் மற்றும் சமயத் தலைவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

ஐஸ் போதைப்பொருள் பாவனை ஆபத்தானது என்றாலும், முன்னைய சட்டங்களின்படி ஹெரோயின் போதைப்பொருள் பாவனையாளர்கள் மீது மட்டுமே தண்டனை வழங்கும் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன. அரசாங்கம் மற்றும் ஜனாதிபதியின் ஆலோசனையுடன், இந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம் - என்றார்.

## கிரிக்கெட்...

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு அதன் தலைவர் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் தலைமையில் அண்மையில் (22) நாடாளுமன்றத்தில் கூடியபோதே இந்தக் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

அனைத்து வசதிகளுடனும் ஒரு நாளைக்கு 800 டொலர் நிதி ஒருவருக்கு செலுத்தப்பட்டுள்ளதுடன், அதிகாரிகள் அல்லாத தரப்பினரும் இந்த வசதியின் கீழ் சுற்றுலாவில் கலந்துகொண்டுள்ளதாகவும் இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை கிரிக்கட் அணிக்கு வீரர்களை தேர்ந்தெடுக்கும் போது மதசார் குழுவொன்றுக்கு சொந்தமான வீரர்களை மாத்திரம் தேர்ந்தெடுப்பதாக ஒரு கருத்துக் காணப்படுவதாகவும், கடந்த காலங்களில் திறமைகளை வெளிக்காட்டிய கிரிக்கட் வீரர் சாமிக கருணாரத்னவைத் தேசிய அணிக்குத் தேர்ந்தெடுக்காமை குறித்த மதக் கொள்கைக்கு இணங்காமையே காரணம் என ஒரு கருத்து இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

அதேபோன்று, இருபதுக்கு 20, பத்துக்கு 10 மற்றும் எல்.பி.எல். போட்டிகளை மேற்கொள்ளும் போது நிதிப் பயன்பாடு தொடர்பில் முறையான ஒழுங்குபடுத்தலொன்று விளையாட்டு அமைச்சின் தலையீட்டில் இடம்பெற வேண்டும் எனவும் உறுப்பினர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

மாகாண சபைகள் செயற்படாமையால் மாகாண மற்றும் பிரதேச விளையாட்டுகள் பாதிக்கப்பட்டு வருவது தொடர்பிலும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட்டதுடன், அது தேசிய ரீதியில் விளையாட்டு வீரர்கள் உருவாகுவதில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதால் இது தொடர்பிலும் அமைச்சரின் கவனத்தை செலுத்துமாறு உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். நாடு முழுவதும் காணப்படும் பல்வேறு விளையாட்டு சம்மேளனங்களின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் வேலைத்திட்டமொன்றை விளையாட்டுத்துறை அமைச்சினால் ஆரம்பிக்க வேண்டும் எனவும் இங்கு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

## காசல்...

நடவடிக்கை எடுத்துள்ளது.

2018 முதல் நிலுவையிலுள்ளமின்கட்டணத்தில் கடைசி ஐந்து மாதங்களுக்கான நிலுவைத் தொகையையும் மின்கட்டண அதிகரிப்புக்கான பணத்தையும் செலுத்தி தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தை பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழர் பிரச்சினை...

வழங்குவதற்கு தாம் தயாராக இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் நேற்று (24) தெரிவித்தார்.

நடைமுறையில் உள்ள 13 ஆவது திருத்தத்துக்கு அமைய அதிகாரங்களைப் பகிரும் நிலைப்பாட்டில் ஐக்கிய மக்கள் சக்தி உறுதியாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2023ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

தேர்தலை நடத்த மாட்டோம் என ஜனாதிபதி கூறியதில் தமக்கு ஆச்சரியமில்லை. நாடாளுமன்ற பெரும்பான்மையின் விருப்பத்தின் பேரில் ஜனாதிபதியானவர் என்பதால் அவருக்கு தேர்தலொன்றின் பெறுமதி புரியவில்லை. ஜனாதிபதியின் உரைக்கு ஒரு சில அடிமைகள் ஆரவாரம் காட்டினாலும் நாட்டின் 220 இலட்சம் மக்கள் மிகவும் வருத்தம் கொண்டதாகவும், ஜனநாயகத்துக்கான மக்கள் சக்தி விரைவில் உருவாகும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## கோட்டா ஆட்சிக்காகவே...

தெரியும் என்றும் மைத்ரியும் இதற்கு பொறுப்புக் கூறவேண்டும். அது உண்மை என உறுதியாக நம்புகிறேன்" - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (23) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

நான் இருந்தால் சூழ்ச்சி செய்ய முடியாது என்பதற்காகவே என்னை நீக்கிவிட்டார்கள். பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டு வெற்றிபெற முடியாது என்பது ராஜபக்ஷக்களுக்கு புரிந்துவிட்டது. எனவே, சுதந்திரக் கட்சியை கைப்பற்றவே அவர்கள் முயற்சிக்கிறார்கள். அவர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப சுதந்திரக் கட்சியை நேசிப்பவர்கள் அனைவரையும் நீக்கிவிட்டு சுதந்திரக் கட்சியை ராஜபக்ஷக்களிடம் ஒப்படைக்கவே மைத்ரியும் தயாசிறியும் முயற்சிக்கிறார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எனது தந்தையால் உருவாக்கப்பட்ட கட்சி என்பதற்கு அப்பால், அது நாட்டு மக்களின் கட்சி. சுதந்திரக் கட்சியிலிருந்து எனது உறுப்புரிமையை நீக்கிய தகவலை ஊடகங்களினூடாகவே அறிந்துகொண்டேன். பொதுவாக இடம்பெறும் கட்சி நடைமுறைகள் கூட சுந்திரக் கட்சியின் தலைவருக்கும் பொதுச் செயலாளருக்கும் தெரியாது. முறையாக செயற்படுவதென்றால் எங்களிடம் நேரடியான விசாரணைகளை மேற்கொண்டு, அதன் பின்னர் எங்களை கட்சியிலிருந்து நீக்குவதற்கான காரணத்தை தெளிவாக குறிப்பிட்டு எழுத்து மூலமாக அறிவித்திருக்க வேண்டும்.

மைத்ரிபால இந்த பழமையான கட்சியை சீரழிப்பதை பார்க்கும்போது கவலையாக இருக்கிறது. முதலில் ராஜபக்ஷக்கள் கட்சியை சீரழித்தார்கள். தற்போது மைத்ரி சீரழிக்கிறார். கட்சியிலிருந்த சிரேஷ்ட உறுப்பினர்கள் அனைவரையும் நீக்கிவிட்டார்கள். தற்போது காரணங்கள் எதுவுமின்றி கட்சியிலிருந்து நீக்குகிறார்கள். கட்சியில் யாரும் இல்லாத நிலைமையே இருக்கிறது.

கட்சியின் கொள்கை மிகவும் அவசியமானதாகும். சுதந்திரக் கட்சி தனிநபர்களை விருத்தியடையச் செய்வதற்கானதல்ல. நாட்டை விருத்தியடையச் செய்யும் கட்சி. ஆனால், தற்போதுள்ள அனைவரும் சுய விருத்திக்காக செயலாற்ற பழக்கப்பட்டுவிட்டார்கள். கட்சி எங்களுடனேயே இருக்கிறது என்றார்.

## இலங்கை அகதி...

உயிரிழந்துள்ளதாக இலங்கை அகதி ஒருவர் நேற்று (24) தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த 37 வயதான நான்கு பிள்ளைகளின் தந்தையான சுந்திரலிங்கம் கிரிதரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த 303 பேர் கடந்த 08 ஆம் திகதி பிலிப்பைன்ஸுக்கும் வியட்நாமிற்கும் இடையே உள்ள கடலில் கப்பலில் தத்தளித்துக் கொண்டிருந்த போது அவர்களை ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் கடற்படையினர் காப்பாற்றி வியட்நாம் கொண்டுவரப்பட்டு அவர்கள் அங்கு தற்காலிக அகதிகள் முகாமில் தங்கவைக்கப்பட்டனர்.

இந்நிலையில், இலங்கைக்கு செல்ல முடியாது எனக்கோரி, கடந்த சில தினங்களுக்கு முன்னர் இரு இலங்கை அகதிகள் தற்கொலை செய்ய முயற்சித்திருந்த நிலையில், அவர்களைக் காப்பாற்றி அந்நாட்டிலுள்ள வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது.

இதனைத் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த ஒருவரே, இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும், சடலம் தொடர்ந்தும் அந்த நாட்டு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் சடலத்தை மீள வழங்குவதற்கு அந்நாட்டு அதிகாரிகள் பாரிய தொகையொன்றை கோரி வருவதாகவும் வியட்நாமிலுள்ள இலங்கை அகதியொருவர் தெரிவித்தார்.

## வடக்கு...

அந்தக் கூட்டம் சுமுகமாகவும் இணக்கமாகவும் நடைபெற்றதாகக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களோடு இன்று மாலை சம்பந்தனின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் கூட்டமைப்பு எம்.பிக்கள் யாவரும் பங்குபற்ற அழைக்கப்படுவார்கள் என்று இந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தீர்வு முயற்சிகளுக்கான பேச்சுத் தொடர்பாக இப்போது ஏற்பட்டுள்ள களச்சூழல் குறித்து நேற்று முன்தினக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது என்றும் தெரியவந்தது.

தீர்வுப் பேச்சு முயற்சியில் ஆரம்பத்தில் வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்துக்கு சமஷ்டித் தீர்வு என்ற அதிகாரப் பகிர்வு விடயத்தை ஒன்றுபட்டு நின்று வலியுறுத்துவது எனவும், பின்னர் நிலைமைகளுக்கு ஏற்ப விடயங்களைக் கூடிக் கதைத்துப் பரிசீலித்து தீர்மானங்களை எடுப்பது என்றும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக அதில் பங்குபற்றிய எம்.பி. ஒருவர் தெரிவித்தார்.

# நாட்டில் யுத்தம் இல்லை என்பதற்காக பாதுகாப்பு அமைச்சுக்கு நிதி ஒதுக்காமலிருக்க முடியாது

## பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி. தெரிவிப்பு



அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் பொருளாதாரத்தை நெருக்கடிக்குக்குள்ளாக்கி நாட்டை வங்குரோத்து நிலையை அடைய செய்துள்ளமைக்கு இராணுவத்தினர் நட்டஈடு செலுத்தவேண்டிய தேவை கிடையாது. இராணுவத்தினர் நாட்டுக்கு எதிராக ஒருபோதும் செயற்படவில்லை. இராணுவத்தின் சேவை தரமற்றதாக அமையும்போது நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குள்ளாகும். ஆகவே, இராணுவத்தை கறிவேப்பிலைபோல் நடத்துவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் - என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் தொழில்நுட்ப அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாடு என்ற ரீதியில் தேசிய பாதுகாப்பிற்கும், எல்லைக்குட்பட்ட பாதுகாப்பு தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டும். நாட்டின் சுயாதீனத்தன்மை, ஆட்புல எல்லை, அரசியலமைப்பு மற்றும் நாட்டு மக்களை பாதுகாக்கும் பொறுப்பு இராணுவத்தினருக்கு உண்டு. நாட்டில் யுத்தம் இல்லை. ஆகவே, பாதுகாப்புத்துறைக்கு அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை கிடையாதென ஒரு தரப்பினர் குறிப்பிடுகிறார்கள்.

நாட்டில் யுத்தம் இல்லை என்பதற்காக பாதுகாப்பு அமைச்சுக்கு நிதி ஒதுக்காமல் இருக்க முடியாது. முன்னறிவிப்பு விடுத்ததன் பின்னர் நாட்டில் பாதிப்பு ஏற்படாது. ஆகவே, பாதுகாப்புத்துறை எந்நிலையிலும் அவதானத்துடனும் முன்னேற்றகரமாகவும் காணப்படவேண்டும். அனர்த்தம் ஒன்று நேர்ந்ததன் பின்னர் பாதுகாப்புப் படையினரை பலப்படுத்த அவதானம் செலுத்த முடியாது.

யுத்த காலத்தில் 11 ஆயிரம் இராணுவத்தினர் இருந்தனர். விடுதலைப் புலிகள் அமைப்பு படை பலத்தில் முன்னேற்றமடைந்து செல்வதைக் கண்டு இராணுவத்தைப் பலப்படுத்தினோம்.

விடுதலைப் புலிகளின் யுத்த உபகரணங்களை அறிந்ததன் பின்னரே இராணுவத்திற்கு பாதுகாப்பு உபரணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இவ்வாறான நிலையில்தான் யுத்தம் 30 வருட காலம் நீண்டு சென்றது - என்றார்.

# 5 ஆயிரமாவது மஹஜன சம்பத சீட்டிழுப்பின் முதல் சீட்டு ஜனாதிபதி ரணிலிடம் கையளிப்பு





5 ஆயிரமாவது மஹஜன சம்பத லொத்தர் சீட்டிழுப்புக்கான முதல் சீட்டை (ரிக்கெட்) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு விற்பனை செய்யும் நிகழ்வு நேற்று (24) முற்பகல் நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

தேசிய லொத்தர் சபையின் பதில் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் சி.பெரேரா ஜனாதிபதியிடம் சீட்டைக் (ரிக்கெட்) கையளித்தார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரட்னாயக்க, ஜனாதிபதியின் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான ஆலோசகர் பேராசிரியர் ஆஷு மாரசிங்க, தேசிய லொத்தர் சபையின் பொது முகாமையாளர் சட்டத்தரணி ஹஷினி ஜயசேகர, பணிப்பாளர் குழு உறுப்பினர்களான டி.டி.ஜயசிறி, சட்டத்தரணி அசங்க ரந்தெனிய, உதவிப் பொது முகாமையாளர் (விற்பனை) மெனுர சதுரங்க, உதவிப் பொது முகாமையாளர் (கொள்முதல்) சுனெத் ஜயவர்தன உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# ஆசிரியர் சேவைக்கு ஆட்களை இணைப்பதில் புதிய நடைமுறை

## கல்வி அமைச்சர் சுசில் அறிவிப்பு

எதிர்காலத்தில் ஆசிரியர் தொழிலுக்கு ஆட்களை இணைத்துக்கொள்வதில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் - என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் நேற்று (24) நாடாளுமன்றத்தில் இதனை தெரிவித்தார்.அவர் மேலும் கூறியதாவது,

பரீட்சை முறைமையின் ஊடாகவே ஆசிரியர்களை இணைத்துக் கொள்ளவுள்ளோம். அதனைத் தொடர்ந்து, 19 பீடங்களை நிறைவுசெய்யும் வகையில் உருவாக்கப்படும் தேசிய கல்விப் பல்கலைக்கழகத்தின் ஊடாக ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளனர்.

நான்காண்டுகள் பட்டப்படிப்பு மற்றும் ஆசிரியர் பயிற்சித் திட்டத்திற்கு பிறகு அவர்கள் பாடசாலைகளுக்கு அனுப்பப்படுவார்கள். அதன்மூலம் தரத்துடன் ஓர் ஆசிரியரை உருவாக்க முடியும்.

தற்போது அரச துறையில் கடமையாற்றும் பயிலுனர் பட்டதாரிகளை ஆசிரியர்களாக இணைத்துக்கொள்வதற்காக நாடளாவிய ரீதியில் பொதுப் பரீட்சை டிசம்பர் மாத நடுப்பகுதியில் நடத்தப்படும் .

26,000 ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். பொதுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்காணல்கள் மூலம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் கூறினார்.

# கப்ரால் மீதான பயணத் தடை நீடிப்பு



மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத் தடையை டிசம்பர் மாதம் 15ஆம் திகதிவரை நீடிக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான தனிப்பட்ட முறைப்பாடு நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் அழைக்கப்பட்டபோது சந்தேகநபரான அஜித் நிவார்ட் கப்ரால் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (24) ஆஜராகியிருந்தார்.

இதன்போது, அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், இந்த வழக்கை தொடர்ந்து நடத்த இயலாதென முதற்கட்ட ஆட்சேபம் தெரிவித்தனர்.

முதற்கட்ட ஆட்சேபங்கள் தொடர்பான எழுத்துமூல சமர்ப்பணங்களை டிசம்பர் மாதம் 15ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குனவல மனுதாரரின் சட்டத்தரணிக்கு உத்தரவிட்டார்.

தென்மாகாண முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னகோனே அந்த தனிப்பட்ட முறைப்பாட்டை சமர்ப்பித்திருந்தார். 2006ஆம் ஆண்டுமுதல் 2015ஆம் ஆண்டுவரை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக கடமையாற்றியபோது பொது நிதியை தவறாக பயன்படுத்தியதாக அஜித் நிவார்ட் கப்ரால் மீது தனிப்பட்ட முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# துமிந்த சில்வாவுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டமை தொடர்பில் விளக்கமளிக்க கோட்டாபயவுக்கு அறிவித்தல்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்பட்டமை தொடர்பில் விளக்கமளிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் இது தொடர்பில் நீதிமன்றுக்கு அறிவிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அறிவித்தல் அனுப்புவதற்கு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இது தொடர்பான அடிப்படை உரிமை மனு யசந்த கோதாகொட மற்றும் முர்து பெர்னாண்டோ ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.


முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட மரணதண்டனையை உயர் நீதிமன்றத்தின் ஐவரடங்கிய நீதியரசர் குழாமும் ஏகமனதாக அங்கீகரித்திருந்ததாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், ஜனாதிபதி பொது மன்னிப்பின் ஊடாக அவரை விடுவிக்க முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொண்ட தீர்மானத்தை ஆட்சேபத்துக்கு உட்படுத்தி பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மனைவி, மகள் மற்றும் சட்டத்தரணி ஒருவர் ஆகியோரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு தொடர்பான மேலதிக விசாரணைகளை எதிர்வரும் டிசம்பர் 16ஆம் திகதிவரை ஒத்திவைக்க நீதியரசர்கள் குழாத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# அதிகாரப்பகிர்வுக்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை!

## சரத் வீரசேகர சபையில் காட்டம்



நாட்டில் அதிகாரப்பகிர்வுக்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க சிங்கள இனம் வரலாற்றில் இருந்து செய்த உயிர் தியாகத்தை ஒவ்வொரு இனத்தின் தேவைக்காகவும், ஒருசிலரின் தேவைக்காகவும் விட்டுக்கொடுத்து நாட்டை பிளவுபடுத்த முடியாது. மாகாண சபை ஒரு வெள்ளை யானையை போன்றது. இலங்கையர்கள் என்ற அடிப்படையில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படலாம் - என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் தொழில்நுட்ப அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் இராணுவத்திற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என குற்றஞ்சாட்டப்படுகிறது.

இராணுவத்தினரது தியாகத்தினால் நாடு இன்று அமைதியாக உள்ளதென்பதை அனைவரும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இராணுவத்திற்கு ஒதுக்கும் நிதி அபிவிருத்தி மற்றும் தேசிய பாதுகாப்பிற்கான முதலீடு என கருத வேண்டும்.

நாட்டில் 30 வருட பயங்கரவாத யுத்தம் காணப்பட்டது. இராணுவம், பாதுகாப்புத் தரப்பினரால் நாட்டு மக்கள் இன்று சுதந்திரமாக தமது அன்றாடப் பணிகளில் ஈடுபடுகிறார்கள்.

இருப்பினும் இராணுவத்திற்கு எதிராக போர்க் குற்றம் ஜெனீவாவில் முன்வைக்கப்பட்டுள்ளது, ஆகவே, நாட்டு மக்கள் இவ்விடயம் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அக்காலப்பகுதியில் பெற்றோர் ஒன்றாக வெளியில் செல்வதில்லை, இருவரும் ஒன்றாக இறந்தால் தமது பிள்ளைகள் அநாதைகளாகுவார்கள் எனக் கருதுகிறார்கள்.

இந்த நிலையை இராணுவத்தினர் மாற்றியமைத்தார்கள். 29 ஆயிரம் இராணுவத்தினர் நாட்டுக்காக உயிர் தியாகம் செய்தார்கள், 14 ஆயிரத்திற்கும் அதிகமானோர் அங்கவீனமடைந்துள்ளார்கள்.

மிகுதியானவர்களை போர்க் குற்றவாளிகளாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒருசில இராணுவ அதிகாரிகளுக்கு சில நாடுகளுக்கு வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிற நிறுவனங்கள் ஊடாக இராணுவத்திற்கு எதிராக சாட்சியங்களைத் திரட்டி இராணுவத்தினரை சர்வதேச அரங்கிற்கு கொண்டுசெல்லும் நடவடிக்கை எடுக்கப்படுகிறதென்பதை நாட்டு மக்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

தமக்காக உயிர் தியாகம் செய்ய இராணுவத்தை தண்டிக்க முயற்சிக்கும் செயற்பாட்டை நாட்டு மக்கள் அறிந்துகொண்டால், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் வீதிக்கு இறங்குவார்கள், போராட்டத்தில் ஈடுபடுவார்கள்.

இராணுவத்தினரின் செயற்பாடு, இராணுவத்தினரது எண்ணிக்கை தொடர்பில் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் பேசப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இலங்கை இராணுவம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் ஒருதலைப்பட்சமானதாக காணப்படுகிறது.

மனித உரிமைகள் என்ற நிலைப்பாட்டுக்குள் இருந்துகொண்டு ஒருதலைப்பட்சமாக செயற்படுவதை எவ்வாறு ஏற்றுக்கொள்வது.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப்பகிர்வு தொடர்பில் நாடாளுமன்றத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

13ஆவது திருத்தத்தை இந்தியா பலவந்தமான முறையில் அமுல்படுத்தியது. இலங்கையர்கள் அதனைக் கோரவில்லை.

மக்களின் எதிர்ப்பிற்கு மத்தியில்தான் 13 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது. அப்போதைய ஜனாதிபதி ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தி, அதிகாரத்தைப் பிரயோகித்து அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நிறைவேற்றினார், ஆகவே 13ஆவது திருத்தத்திற்கும், நாட்டு மக்களுக்கும் இடையில் தொடர்பில்லை.

அதிகாரப்பகிர்வுக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை, அதிகாரப்பரவலாக்கம் குறித்து அவதானம் செலுத்தலாம். ஒற்றையாட்சி நாட்டில் அதிகாரப்பகிர்வுக்கு இடமில்லை. சமஷ்டியாட்சி நாடுகளில் மாத்திரம்தான் அதிகாரப்பகிர்வு சாத்தியமாகும்.

நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க சிங்கள இனம் உயிர் தியாகம் செய்துள்ளது. சோழர், பாண்டியன் மற்றும் ஆங்கிலேயர்களிடம் இருந்து நாட்டை பாதுகாக்க சிங்களவர்கள் போராடினார்கள், தியாகம் செய்தார்கள். ஆகவே, அதிகாரப்பகிர்வு என்ற சொற்பதம் ஊடாக நாட்டை பிளவுபடுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனும் இந்த நோக்கத்துடன் செயற்பட்டார். ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க 29 ஆயிரம் இராணுவத்தினர் உயிர் தியாகம் செய்தார்கள்.

பாதுகாக்கப்பட்ட ஒருமைப்பாட்டை ஒவ்வொருவரின் தேவைக்காக மலினப்படுத்த முடியாது. மாகாண சபைக்கு முழுமையாக எதிர்ப்பை தொடர்ந்து வெளிப்படுத்துவேன்.

மாகாண சபை என்பது வெள்ளை யானை. ஒவ்வொரு இனத்தவரின் தேவைக்காக நாட்டை பிளவுபடுத்த முடியாது, இலங்கையர்கள் என்ற அடிப்படையில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் மாத்திரமே நாட்டை முன்னேற்ற முடியும் - என்றார்.

# எல்லை நிர்ணய முன்மொழிவுக்கான காலக்கெடு டிச. 05 வரை நீடிப்பு

உள்ளூராட்சி நிறுவனங்களின் எல்லை நிர்ணயம் தொடர்பான எழுத்துமூல முன்மொழிவுகள் மற்றும் கருத்துகளை கையேற்கும் காலக்கெடு எதிர்வரும் 05ஆம் திகதிவரை நீடிக்கப்படுவதாக தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் தவிசாளர் மஹிந்த தேசியப்பிரிய அறிவித்துள்ளார்.

இதுகுறித்து தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உள்ளூர் அதிகாரசபைகளுக்கான வட்டாரங்களின் எல்லை நிர்ணயம் தொடர்பாக அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் மற்றும் ஆர்வலர்கள் ஆகியோரிடமிருந்து முன்மொழிவுகளையும் கருத்துகளையும் கையேற்பதற்கான காலக்கெடுவை நீடிக்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இந்த கோரிக்கைகளுக்கமைவாக எதிர் வரும் டிசம்பர் 05ஆம் திகதிவரை இந்த காலக்கெடு நீடிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு

வசந்தம் ரிவியின் ஊடக அனுசரணையுடன் வைஷ்ணவி நற்பணி மன்றம் நடத்தும் புலமைப்பரிசில் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை (27) அன்று தலவாக்கலை ஹோல்புருக் தமிழ் மகா வித்தியாலயத்தில் காலை 8.30 மணிமுதல் 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இதில் மாணவருக்கான மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்பட்டு விளக்கங்களும் வழங்கப்படும்.

ஆசிரியர்களான பி.அன்பழகன், ஜி.கார்த்திக், எம்.துசாந்தன் ஆகியோர் கற்பிக்கின்றனர்.

மேலும் நுவரெலியா கல்வி வலயத்திற்கு உட்பட்ட 41 பாடசாலைகளிலிருந்து 300 மாணவர்கள் இதன்போது கலந்துகொள்ளவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை எஸ்.தினேஷ், ஒருங்கிணைப்பை ஸ்ரீதரன் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

# அமரர் முத்து சிவலிங்கத்தின் பூதவுடல் தீயுடன் சங்கமம்





(எஸ்.கணேசன், செ.திவாகரன்)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும், மலையகத்தின் மூத்த தொழிற் சங்கவாதியுமான அமரர் முத்து சிவலிங்கத்தின் பூதவுடல் நேற்று (24) தீயுடன் சங்கமமானது.

அரசியல்வாதிகள், தொழிற்சங்கவாதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், கட்சி செயற்பாட்டாளர்கள், தொண்டர்கள் என நூற்றுக்கணக்கானோரின் பங்கேற்புடன் இறுதிக்கிரியைகள் நடைபெற்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோரின் இரங்கல் செய்திகள் வாசித்துக் காட்டப்பட்டன.

அவரின் பூதவுடல் அஞ்சலிக்காக நுவரெலியாவிலுள்ள அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தது.

பின்னர் நேற்று (24) இல்லத்திலிருந்து நுவரெலியா நகர் வழியே எடுத்துச்செல்லப்பட்டு, நுவரெலியாவிலுள்ள கட்சி காரியாலயத்திற்கு கொண்டு சென்று, பின்னர் நுவரெலியா பொது மயானத் தில் மாலை 5.30 மணியளவில் தகனம் செய்யப்பட்டது.

தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2022, நவம்பர் 25ஆம் திகதி, வெள்ளிக்கிழமை**

# ரணிலின் எதேச்சதிகாரம்!

தேர்தல் ஒன்று வருமாயின் இப்போதைய ஆட்சியை மாற்றி புதிய அரசாங்கமொன்றை அமைக்க வழிசமைக்கலாம் என்பது மக்களில் பெரும்பாலானோரின் கருத்து. ஆனால், நாடாளுமன்றத் தேர்தல் ஒன்று இப்போதைக்கு இல்லையென்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நேற்று முன்தின நாடாளுமன்ற உரை தெட்டத் தெளிவாக வெளிப்படுத்திவிட்டது.

தாமும் போட்டியிடும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை அடுத்த வருடம் நவம்பர் மாதத்துக்குப் பின்னர் அவர் முன்கூட்டியே அறிவித்தாலேயன்றி, 2024 ஒக்டோபர் வரை எந்தத் தேர்தலும் நடைபெற வாய்ப்பில்லை என்பது தெளிவாகிவிட்டது.

மாகாண சபைத் தேர்தல் நடப்பதற்கான கட்டாயம் ஏதுமில்லை. அதற்கான தேர்தல் சட்டம் ஒன்றை நாடாளுமன்றம் உருவாக்காத வரை அந்தத் தேர்தல் நடைபெறாது. ஒரு சட்டத்தை உருவாக்கும்படி உயர் நீதிமன்றம் கூட நாடாளுமன்றத்தைப் பணிக்க முடியாது. ஆட்சித் தலைமையும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து மாகாண சபைத் தேர்தல் சட்டத்தைக் கொண்டு வராத வரை அந்தத் தேர்தலுக்கு இடமில்லை. அதனால் அது இப்போதைக்கு சாத்தியமில்லை.

இப்போதைய சட்ட ஏற்பாடுகளின்படி, எதிர்வரும் மார்ச் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். ஆனால், இளைஞர் - யுவதிகளுக்கு அதிக இடமளித்தல், தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைத்தல் போன்ற பல்வேறு தேர்தல் சீர்திருத்தங்களையும் செய்த பின்னர்தான், இந்தத் தேர்தல் நடத்தப்படும் என்ற முடிவுக்கு அரசுத் தலைமை வந்துவிட்டது. அது அமைச்சரவைத் தீர்மானமாக அறிவிக்கப்பட்டும் விட்டது.

சட்ட ரீதியாக அந்தத் தேர்தலை நடத்தாமல் கடத்துவதற்கான தந்திரோபாயங்கள் அரசுத் தரப்பிலிருந்து இவ்வாறு கட்டவிழத் தொடங்கிவிட்டன. ஆகையால், அந்தத் தேர்தலும் தள்ளிப் போய் விடுமென்பது கண்கூடு.

நாடாளுமன்றத் தேர்தலும் இப்போதைக்கு இல்லை என்பதை ஜனாதிபதியே தெளிவுபடுத்தி விட்டார். அடுத்த பெப்ரவரி மாதத்துக்குப் பின்னர் நாடாளுமன்றத்தை எப்போதும் முன்கூட்டியே கலைத்துத் தேர்தலுக்கு உத்தரவிடும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வந்துவிடும்.

ஆனால், பொருளாதார மீட்சியை ஏற்படுத்தாமல் நாடாளுமன்றத்தைக் கலைக்க மாட்டேன் என்று நாடாளுமன்ற உரை மூலம் உலகுக்கு உறுதி கூறியிருக்கின்றார் அவர்.

தேர்தலை - மக்களின் வாக்களிப்பை - எதிர்கொள்ளும் திராணியற்ற இந்த அரசுத் தலைவர் - ஜனாதிபதி - தமது நாடாளுமன்ற உரையில், மக்கள் தேர்தல்களை வெறுக்கின்றார்கள் என்று கூறி, தமது முடிவுக்கு நியாயம் வேறு கற்பிக்கின்றார். போகிற போக்கில், நாட்டில் அடுத்த இரண்டு வருடங்களுக்கு தேர்தல் வாக்களிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்பது தெளிவாகின்றது.

உடனடியாக தேர்தலொன்று நடக்கும் என்றால் அதன் முடிவுகள் எப்படியிருக்கும் என்பதை அறியாதவர் அல்லர் ரணில். அரசியலில் அவர் அடையவேண்டிய உச்சபட்ச பதவியை அவர் அடைந்திருப்பதால் அதனை மேலும் நீடித்துக்கொள்ளும் வழிவகைகளை மட்டுமே அவர் கவனிப்பார். அதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவு அவருக்குத் தேவை. நாடாளுமன்றத் தேர்தலோடு நடந்தால் பெரும்பாலான பெரமுன எம்.பிக்கள் வீடு செல்வார்கள் என்பதால் தேர்தல் இப்போதைக்கு வராது என்ற செய்தியும் அவர்களுக்கு உவகையே. தேசியப்பட்டியலில் ஒரேயொரு ஆசனத்துடன் ஜனாதிபதியாகி, மக்கள் போராட்டங்களால் ஆட்சியை மாற்றவே விடமாட்டேன் என்று பகிரங்கமாகவே அறிவிக்கும் ரணில், தேர்தலை இப்போதைக்கு நடத்தமாட்டேன் என்று கூறுவது பெரிய விடயமல்ல. ஜனநாயக ரீதியில் மக்களை சந்திப்பதைத் தவிர்க்கிறார் ரணில். அது நாட்டுக்கும் வீட்டுக்கும் நல்லதல்ல.

# அபூர்வ ஓநாய் நோயால் அவதிப்படும் இளைஞர்



முகம் மற்றும் உடலெங்கும் அதிக அளவில் உரோமம் வளரும், ஓநாய் நோய் எனப்படும் அபூர்வ நோயால், இந்திய மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயது இளைஞர் அவதிப்படுகிறார்.

மரபியல் கோளாறால் 'ஹைபர்டிரிகோசிஸ்' எனப்படும், ஓநாய் நோய் மிகவும் அபூர்வமாக ஏற்படும். இந்த நோய் எதனால் ஏற்படுகிறது என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இதேவேளை இந்நோய் மரபணுக் குறைபாடுகளால் ஏற்படுவதாக கூறப்படுகிறது. இதற்கு சிகிச்சையுமில்லை. இந்நோய் ஏற்பட்டால், உடலின் சில குறிப்பிட்ட பகுதிகள் அல்லது உடல் முழுதும் அதிக அளவில் உரோம வளர்ச்சி இருக்கும்.

மத்திய பிரதேச மாநிலம் நான்ட்லெடா கிராமத்தைச் சேர்ந்த லலித் படிதார் என்ற இளைஞரே இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். சிறு வயதிலேயே உடல் முழுதும் அவருக்கு உரோமம் வளரத் தொடங்கியது. தன்னுடைய 7 வயது வரை இதை ஒரு பெரிய பிரச்சினையாக லலித் படிதார் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், உரோமம் அதிகளவில் வளரத் தொடங்கியதும், ஊரில் உள்ளவர்கள் தன்னைப் பார்த்து பயப்படுவது, உதாசீனப்படுத்துவது போன்றவற்றால் இது மிகப் பெரிய பிரச்சினை என்பது அவருக்குத் தெரியவந்தது. இந்நோய்க்கு தற்போதைய நிலையில் எந்த சிகிச்சையுமில்லை. அடிக்கடி சவரம் செய்வது அல்லது உரோமத்தை நீக்கும் மற்ற முறைகளைப் பயன்படுத்துவது மாத்திரமே தீர்வாகும். இவருடைய குடும்பத்தில் யாருக்கும் இதுபோன்ற பாதிப்பு ஏற்பட்டதில்லை. இந்நிலையில், தனக்கு எவ்வாறு இந்நோய் ஏற்பட்டது என்ற விரக்தியில் லலித் படிதார் உள்ளார். இதனால், பாடசாலைப் படிப்பை பாதியிலேயே நிறுத்த வேண்டியதாயிற்று. திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் மற்றும் பொது விழாக்களில் பங்கேற்பதில்லை. வீட்டிலேயே முடங்கிக் கிடக்கிறார்.

# பெண்கள் நம் கண்கள்!



**"பெண்களுக்கு எதிரான அனைத்துலக வன்முறை ஒழிப்பு நாள் இன்றாகும்"**

உலகளாவிய ரீதியில் பெண்கள் இன்று பல விதமான வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். பெண்களுக்கு எதிரான வன்முறைகளை வெளியுலகிற்கு காட்டி அதற்கான நியாயமான தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்காக சர்வதேச மகளிர் தினம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பு சர்வதேச தினம் ஆகியன அனுஷ்டிக்கப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 1999 டிசம்பர் 17 அன்று கூடியபோது ஆண்டுதோறும் நவம்பர் 25 ஆம் நாளை பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பு சர்வதேச தினமாகப் பிரகடனம் செய்யும் தீர்மானத்தை நிறைவேற்றியது. இத்தீர்மானம் ஐக்கிய நாடுகள் அவையின் 54/ 134. இலக்கப் பிரேரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

டொமினிக்கன் குடியரசில் 1960 நவம்பர் 25 இல் 'மிராபெல் சகோதரிகள்' என அழைக்கப்படும் மூன்று சகோதரிகள் அவர்களின் அரசியல் செயற்பாடுகளுக்காக அந்நாட்டின் அன்றைய ஆட்சியாளர் ரபாயெல் டுருஜிலியோவின் (1930-1961) உத்தரவின் பேரில் படுகொலை செய்யப்பட்டனர். பாதிக்கப்படும் பெண்களுக்கெதிராகவே இவர்கள் சிறப்பாகக் குரல் கொடுத்தவர்கள். 'மறக்கமுடியாத வண்ணத்துப் பூச்சிகள்' என்று பின்னர் உலகில் பெயர்பெற்ற இந்த மிராபெல் சகோதரிகள் இலத்தீன் அமெரிக்காவில் பெண்களுக்கு எதிரான வன்முறைக் கொடுமையின் சின்னமாக மாறினார்கள். 1980ஆம் ஆண்டு முதல் அந்த நாள் அவர்களின் படுகொலையை நினைவு கூர்வதற்காகவும், பால்நிலை வன்முறைகளுக்கு எதிராக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காகவும் தெரிவுசெய்யப்பட்டது. அன்றைய தினத்தைத் தொடர்ந்து 16 நாட்களுக்கு பால்நிலை வன்முறைகளுக்கு எதிரான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு உலகளாவிய ரீதியில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இந்தச் செயற்பாடுகள் சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10ஆம் திகதி முடிவடையும்.

உலகம் முழுவதும் பெண்கள் மீதும் குழந்தைகள் மீதும் நிகழ்த்தப்படும் வன்முறைகளே பெண் இனத்தின் அவலநிலையைச் சொல்லிவிடும்

ஆணாதிக்க சமூகக் கட்டமைப்பும் பெண்கள் கீழ்மையானவர்கள் என்ற எண்ணமும்தான் பெண்கள் மீதான வெறுப்பு அரசியலுக்கு முதன்மைக் காரணங்கள். பெண்கள் மீதான வன்முறை என்பது ஒட்டுமொத்த மனித சமூகத்தின் எல்லாத் தளங்களிலும் நடைபெற்றுவருவதை கவனிக்க வேண்டியது அவசியம்.

உலகில் மூவரில் ஒரு பெண் தன் வாழ்நாளில் ஒரு முறையாவது பாலியல் தொல்லைக்கு ஆளாவதாக ஒரு கணக்கெடுப்புத் தகவல் சொல்கிறது. பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் பெரும்பாலும் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களாலேயே நடக்கின்றன. பாலியல் தொழிலுக்காக மட்டும் ஒவ்வோர் ஆண்டும் இலட்சக்கணக்கான பெண்கள் கடத்தப்படுகிறார்கள். பெண்கள் மீதான கொடுமைகளை எதிர்த்து மகளிர் அமைப்புகளின் சார்பில் ஆயிரக்கணக்கான போராட்டங்கள் உலகம் முழுவதும் நடைபெற்றுவருகின்றன.

மனித இனத்தின் வழிகாட்டியாகப் பெண்கள் இருந்தநிலை மாறி, இன்றைக்குப் பெண்ணை சக மனுஷியாகக்கூட கருதாத சமூகத்தில் நாம் வாழ்கிறோம். பெண்கள் எவ்வளவு சாதனைகளைப் புரிந்தாலும் அவர்களை அழகுப் பதுமையாக, அடிமையாக, நுகர்வுப் பொருளாகவே பார்க்கும் போக்கு ஆபத்தானது. இந்நிலை மாற வேண்டுமென்றால் சமூக மாற்றத்தினூடே தனிநபரின் மனமாற்றமும் முக்கியம்.

# சரியாக நடைபெறாத சட்டக்கல்லூரிப் பரீட்சை!

இலங்கையில் இடம்பெறும் மிக முக்கியமான போட்டிப் பரீட்சைகளுள் சட்டக் கல்லூரிப் பரீட்சையும் ஒன்றாகும்.

நாட்டின் நீதியை நிலைநாட்டப் போகும் சட்டத்தரணிகளை உருவாக்கும் ஒரு போட்டிப் பரீட்சை எவ்வளவு சுயாதீனமாக கட்டுக்கோப்புடன் அமைய வேண்டும் என்பது நாம் யாவரும் கடந்த காலங்களில் இடம்பெற்ற பரீட்சைகளின் நேர்த்தியிலும் வினாப்பத்திரத்தின் தரத்திலும் அறிந்த விடயமே. அந்த வகையில் கடந்த காலங்களில் பரீட்சைத் திணைக்களத்தினால் இந்தப் பரீட்சை மிகவும் நேர்த்தியான முறையில் இடம்பெற்றது.

ஆனால், முதன்முறையாக இவ்வருடம் சட்டக்கல்லூரியின் மேற்பார்வையின் கீழ் இந்த பரீட்சை இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் கொழும்பிலுள்ள இரு பிரபல கல்லூரிகளான ஆனந்தா கல்லூரி மற்றும் ரோயல் கல்லூரியில் இதற்கான மத்திய நிலையங்கள் தெரிவுசெய்யப்பட்டு 2022 நவம்பர் 20ஆம் திகதி பரீட்சை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்த வகையில் பரீட்சைக்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டிருந்தன. அதேபோல் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத சுமார் 800 பரீட்சார்த்திகள் ரோயல் கல்லூரியின் மண்டப இலக்கம் 5 இற்கு பரீட்சை இடம்பெறும் தினம் காலை 8 மணிக்கு முதல் வருகை தந்து தங்களுக்கான பரீட்சை அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும் என மின்னஞ்சல் மூலம் குறிப்பிடப்பட்டிருந்தது.

இருப்பினும், பரீட்சார்த்திகள் காலை 8 மணிக்கு முன்னர் சென்றும் கூட அவர்களுக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படாது காலை 9 மணிக்கு பிறகுதான் அவை அவர்களுக்குக் கிடைக்கப்பெற்று மு.ப. 10 மணியளவில் பரீட்சை ஆரம்பமாகியுள்ளது. சட்டக் கல்லூரியினால் விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்ட நேர சூசியின்படி பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சையானது காலை 9 மணியளவிலும் மொழித்திறன் பரீட்சையானது பி.ப. 1 மணியளவிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனந்தக் கல்லூரியில் இந்த நேர சூசி பேணப்பட்டிருந்தது.

ஆனாலும், ரோயல் கல்லூரியில் பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சையானது சிலருக்கு காலை 9 மணியளவிலும் சிலருக்கு மு.ப. 10 மணியளவிலும் ஆரம்பிக்கப்பட்டிருந்த அதேவேளை மொழித்திறன் பரீட்சையானது சிலருக்கு பி.ப. 1 மணியளவிலும் சிலருக்கு பி.ப. 2 மணியளவிலும் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை கவனிக்கத்தக்க விடயமொன்றாகும். இலங்கை பொதுப்போட்டிப் பரீட்சை வரலாற்றிலேயே இவ்வளவு காலமாக எந்தவொரு தேசியப் பரீட்சையும் குறிப்பிட்ட மத்திய நிலையங்களில் இரு வேறு நேரங்களில் இடம்பெற்றதாக தகவல்களில்லை.



ශ්‍රී ලංකා නීති ශිෂ්‍ය සංගමය
இலங்கை சட்ட மாணவர் சங்கம்
LAW STUDENTS' UNION OF SRI LANKA

2022-11-21

The Principal,
Sri Lanka Law College.

Dear sir,

**Alleged Irregularities at the Law Entrance Examination 2022**

We have received a number of complaints from law students regarding the irregularities and maladministration at the law entrance examination held on 20-11-2022 in multiple centres.

Among the complaints made are inter alia:
1. A significant delay in the distribution of the IQ paper resulted in students not receiving sufficient time at the 4th floor of the 7 story Ananda College examination centre. Further additional time was not given for this delay. This is also alleged to have taken place at Royal College.
2. Insufficient space in the paper to write a 300 word essay and the non-provision of additional papers at Ananda College and other centres. Furthermore, paper was not provided for rough work.
3. Some students who did not receive admissions via email and were instructed to go to the centre at Royal College complained that the distribution of admission cards took an unduly long time resulting in them being able to sit the exam late. Further they were not given additional time for this delay.

We urge you to inquire into these allegations and take necessary remedies to prevent an injustice to these candidates.

Thank you,
Yours faithfully,

Kavindu Malshan
General Secretary
KAVINDU MALSHAN HEPANALAGE

Shenal Wijesinghe
President
SHENAL WIJESINGHE
PRESIDENT
Law Students' Union of Sri Lanka



SRI LANKA LAW COLLEGE

NOTICE

**Admission Card for General Entrance Examination 2022**

If an applicant has not received the **Admission Card** for the above examination to date, please be present at **Royal College, Hall Number 05 and 05 A** on **November 20, 2022, at 8.00 a.m.** to sit for the above examination.

You MUST bring:
1. The original payment receipt for LKR 6000.00 and;
2. The certified copies of educational qualification certificate/s (e.g., G.C.E. O/L and G.C.E. A/L)

You WILL NOT BE ALLOWED to sit for the Entrance Examination if you are unable to produce the above documents at the examination centre.

Unit Head,
Student Registration Unit
November 17, 2022

தொழில்நுட்ப வளர்ச்சி அபிவிருத்தியடைந்த இக்காலகட்டத்தில் எவ்வழியிலாவது குறிப்பிட்ட நேரத்திற்குள் பல்வேறு மோசடிகள் இடம்பெற்றிருக்கக்கூடும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அதேபோல் பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சைக்கான நேர ஒதுக்கீடு 3 மணித்தியாலங்களாக குறிப்பிடப்பட்டிருந்தும் கூட நுண்ணறிவுப் பரீட்சைக்கான கால அவகாசமானது சிலருக்கு இரு மணித்தியாலங்களும் சிலருக்கு ஒரு மணித்தியாலம் மற்றும் சிலருக்கு ஒன்றரை மணித்தியாலங்களுமாக வழங்கப்பட்டிருந்ததாக பரீட்சார்த்திகள் குறிப்பிடுகின்றனர்.

இச்செயற்பாட்டை பார்க்கும்போது பரீட்சார்த்திகள் பலரின் உரிமை மீறப்பட்டுள்ளமை தெட்டத்தெளிவாக விளங்குகிறது. அதேபோல் நுண்ணறிவு பாடத்திற்கான செய்கைவழித் தாள்கள் சிலருக்கு வழங்கப்பட்டும் பலருக்கு வழங்கப்படாமலும் இருந்ததாக பரீட்சார்த்திகள் குற்றம் சுமத்தியுள்ளனர். அதேபோல மொழித்திறன் பரீட்சையில் கட்டுரைக்கு வினாத்தாளில் வழங்கப்பட்டிருந்த இடைவெளியானது போதுமானதாக இல்லை எனவும் அதேபோல் ரோயல் கல்லூரியில் பரீட்சை எழுதிய மாணவர்கள், பரீட்சை நிலையத்திற்கு அருகில் அதிக சத்தத்துடன் இசை நிகழ்ச்சி இடம்பெற்றதாகவும் அது தமக்கு மாபெரும் இடையூறாக இருந்ததாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான பல்வேறு விதமான குளறுபடிகள் இம்முறை பரீட்சையில் இடம்பெற்றுள்ளன. இவ்வாறான பிரச்சினைகளுக்கு பதில் வழங்கக் கூடியவர்கள் யார்? மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் பரீட்சார்த்திகள் மட்டுமின்றி, அவர்களது பெற்றோர்கள் கூட அதிருப்தியை வெளிக்காட்டியுள்ளனர். எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக இவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கும் இந்தப் பரீட்சையில் இடம்பெற்ற மோசடிக்கும் உடனடியான தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். நாட்டின் நீதியையும் அந்தத்துறையின் சுயாதீனத்தையும் பாதுகாக்கும் காரணகர்த்தாக்களை உருவாக்கும் சுமார் 150 வருடகால வரலாறு கொண்ட சட்டக்கல்லூரிக்கும் கறுப்பு ஆடைகளுக்கும் அது கறுப்பு தினம் என்றால் மிகையில்லை.

தமிழ்த் திரைப்படங்களில் வருவதை போல் "உங்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் எம்.எல்.ஏவிடம் வருகிறீர்கள்... அந்த எம்.எல்.ஏவுக்கே பிரச்சினை என்றால் எங்கு செல்வது..?" என்பதைப் போன்றுள்ளது நீதித்துறைக்கேயான இந்த குழப்பங்கள். சகலரும் சமமாக நடத்தப்பட வேண்டியது பரீட்சார்த்திகளின் அடிப்படை உரிமை. அது மீறப்பட்டிருப்பது நாட்டின் அரசியலமைப்பை மீறுகின்ற செயல் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அநீதிக்கு உள்ளாக்கப்பட்டிருப்பது பரீட்சை எழுதிய அனைத்து மாணவர்களும்தான். நேரத்தில் ஏற்பட்ட மாற்றத்தை தவறாக பயன்படுத்தியிருந்தால் அதில் பாதிக்கப்படப்போவது ஓர் ஏழை மாணவனும் சிறுபான்மையின மாணவர்களும்தான் என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை. இது பற்றி பரீட்சை எழுதிய பலரும் பெற்றோர்களும் இன்னும் அறியாமலிருக்கின்றனர். ஊழல்களும் அநீதிகளும் வெளிக்கொணரப்பட்டால் மாத்திரமே இதற்குத் தீர்வு கிட்டும். 4500க்கும் மேற்பட்ட மாணவர்களின் எதிர்காலம் யார் கைகளில்?

நீதித்துறையின் மீது மக்கள் வைத்த நம்பிக்கையின் காரணமாகத்தான் அன்று இலங்கையில் நடந்த மக்கள் புரட்சியில் நீதிக்காக போராடிய பொதுமக்கள் பாதுகாக்கப்பட்டனர். எனவே, அவ்வாறானதொரு துறைக்குத் தெரிவுசெய்யப்படக்கூடிய மாணவர்களுக்குரிய பரீட்சை எவ்வாறு நேர்த்தியாகவும் திட்டமிடலுடனும் நடத்தப்பட்டிருக்க வேண்டும் வேண்டும்? தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் மற்றும் கல்விமான்கள் இதனை உரிய தரப்பினரின் கவனத்திற்குக் கொண்டு செல்வார்களா?

***- பாதிக்கப்பட்ட மாணவன் -***

## நக்கல் நமசிவாயம்

*இனப்பிரச்சினைக்குத் தீர்வு கொடுக்கப்போவதா ரணில் சொல்லுறது சரிதான்.. ஆனா, பொதுஜன பெரமுன ஆக்களோட சேர்ந்து எப்படி கொடுக்கப்போறார் எண்டுதான் தெரியேல்ல..?*



## இன்றைய நாளில்...

* 1833 – சுமாத்திராவில் 8.7 ரிச்டர் நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலை ஏற்பட்டதில் பெரும் சேதம் ஏற்பட்டது.
* 1987 – பிலிப்பைன்ஸில் 'நீனா' என்ற சூறாவளி தாக்கியதில் 1036 பேர் உயிரிழந்தனர்.
* 1960 – டொமினிக்கன் குடியரசின் போராளிகளான மிராபல் சகோதரிகள் படுகொலை செய்யப்பட்டனர்.
* 1992 – செக்கோஸ்லோவாக்கியாவின் நாடாளுமன்றம் அந்நாட்டை செக் குடியரசு, சிலவாக்கியா என இரண்டாக 1993 ஜனவரி 1 இலிருந்து பிரிக்க முடிவெடுத்தது.
* 2008 – இலங்கையின் வடக்குப் பகுதியை 'நிசா' புயல் தாக்கியதில் 15 பேர் உயிரிழந்ததுடன், 90,000 பேர் இடம்பெயர்ந்தனர்.

# கூட்டுப் பொறிமுறை ஊடாக இறால் ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



இறால் வளர்ப்பில் காணப்படும் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றை நிவர்த்தி செய்வதுடன், ஏற்றுமதியையும் அதிகரிக்க வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆலோசனை வழங்கியுள்ளார்.

இறால் பண்ணையாளர்கள் மற்றும் இறால் குஞ்சுகள் உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் தீர்வுகள் தொடர்பான கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று (24.11.2022) நடைபெற்றது.

கடற்றொழில் அமைச்சில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

ஏற்றுமதியாளர்கள், கருத்தரிப்பு நிலைய உரிமையாளர்கள், இறால் வளர்ப்புப் பண்ணையாளர்கள் ஆகிய முத்தரப்பும் ஒன்றிணைந்த கூட்டுப் பொறிமுறை ஊடாக இத்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நிலைமையில் இறால் உற்பத்திச் செலவு அதிகரிப்பு, நோய்த்தாக்கங்கள் போன்ற காரணங்களால் இறால் வளர்ப்பை மேற்கொள்வதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக இறால் உற்பத்தியாளர்கள் குறிப்பிட்டனர்.


இறால் வளர்ப்பானது மிகவும் விரைவாக வளர்ந்து வரும், ஏற்றுமதி நோக்கான கைத்தொழிலாகவும் இலங்கைக்கு கணிசமானளவு வெளிநாட்டுச் செலாவணியை பெற்றுக் கொடுக்கும் ஒரு கைத்தொழிலாகவும் வளர்ந்து வருகின்றது.

இந்நிலையில், நோய்த்தாக்கம் தொடர்பாக ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நக்டா அதிகாரிகளுக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

இச்சந்திப்பில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகள், நக்டா மற்றும் நாரா உயரதிகாரிகள், இறால் பண்ணையாளர்கள், இறால் குஞ்சு உற்பத்தி மையத்தின் பிரதிநிதிகள், ஏற்றுமதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் இறால் வளர்ப்பு சங்கப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.




**முன்மொழியப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழு தீர்மானங்களை முறைப்படுத்துவதற்காகவும் மக்கள் மயப்படுத்துவதற்காகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நடத்தப்படும் மாவட்ட மட்ட கலந்துரையாடல் கூட்டம் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவாவின் தலைமையில் அநுராதபுரம் ரந்திய ஹோட்டலில் நடைபெற்றது. இதன்போது உள்ளூராட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகள், அதிபர்கள், ஊடகவியலாளர்கள், சிவில் அமைப்புகளின் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அநுராதபுரம் செய்தியாளர்)**



**உடப்பு கரைவலையில் கூடுதலாகப் பிடிக்கப்பட்ட மீன்களில் கடந்த வியாழக்கிழமை (24) பெருந்தொகையான நெத்தலி மீன்கள் மீனவர்களால் கரை சேர்க்கப்பட்டன. ஒரு கிலோ நெத்தலி மீன் 400 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டது. மேலும், இது கருவாட்டுக்காகவும் பயன்படுத்தப் பட்டுள்ளது. (உடப்பு செய்தியாளர்)**







**யாழ்ப்பாண நகர் பகுதியில் அமைந்துள்ள உணவகங்களில், யாழ். மாநகர பொதுச் சுகாதார பரிசோதகர்களால் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது. இதன்போது சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகங்களின் உரிமையாளர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர். மேலும், திகதி காலாவதியான உணவுப் பொருட்கள் வைத்திருந்த உணவகங்கள் மீது வழக்கு தாக்கல் செய்வதற்கு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தீர்மானித்துள்ளனர்.**

**(யாழ்.நிருபர்)**




## Assistant Showroom Manager

vd dot dc nl o m mn udc me cd

Key Requirements:

- Assist the showroom manager in planning and
- implementing strategies to attract customers
- Coordinate daily customer service operations
- Track the progress and annual objectives
- Monitor and maintain store inventory
- Evaluate employee performance and identify hiring and training needs

Candidate profile

- 2 years experience in customer service
- Fluent in English and Sinhala/Tamil

Attractive remuneration will be provided for selected candidate.

## Finance Manager

A well reputed media agency in Sri Lanka.

Key Responsibilities:

- Monitor & prepare monthly financial statements/ reports, cashflow & manage funds and expenses
- Actively participate in the preparation of annual budgets, analyze variances and take onward action
- Review/implement financial policies/procedures in accordance with the SLA standards

Candidate Profile

- A graduate in accounting and finance &/or be a member of ICASL, CIMA (UK), or ACCA (UK)
- Possesses 3- 5 years post qualifying experience
- Strong attention to detail & an investigative nature
- Excellent Communication, presentation skills
- High numeracy/ sound technical & IT skills

An attractive remuneration package awaits the ideal candidate.
Interested candidates can apply by sending their CVs to
recruitmentbconnected@gmail.com
Contact us on +94 776 371 134 | +94 777328 123.
Bn d dc ( ) c
No: 07, Skelton Gardens,
Colombo 05

RPFL Richard Pieris Finance

# றிச்சர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட்

## 30 செப்டெம்பர் 2022 முடிவடைந்த காலத்திற்கான நிதிக்கூற்றுக்கள்

| 30.09.2022 முடிவடைந்த காலத்திற்கான முக்கிய நிதித் தரவுகள் (கணக்காய்வுக்குட்படாதது) | நடப்பு காலம் 01/04/2022 முதல் 30/09/2022 வரை | முந்தைய காலம் 01/04/2021 முதல் 30/09/2021 வரை |
|---|---|---|
| ரூபா மில்லியன்களில் | | |
| வட்டி வருமானங்கள் | 1,126.59 | 1,108.38 |
| வட்டிச் செலவினங்கள் | (1,103.89) | (609.91) |
| **தேறிய வட்டி வருமானம்** | **22.70** | **498.47** |
| வர்த்தக செயற்பாட்டின் மூலமான வருமானம் / (இழப்பு) | 0.70 | 0.89 |
| ஏனைய வருமானம் | 120.55 | 72.58 |
| செயற்பாட்டு செலவீனங்கள் (சேதக்கட்டணம் தவிர்த்து) | (307.77) | (288.61) |
| சேதக்கட்டணங்கள் | (82.16) | (81.20) |
| **வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)** | **(245.99)** | **202.14** |
| வரிச் செலவுகள் | (1.30) | (73.01) |
| **வரிக்கு பின்னரான இலாபம்/(நட்டம்)** | **(247.29)** | **129.13** |

| 30.09.2022 உள்ளவாறான முக்கிய நிதித் தரவுகள் (கணக்காய்வுக்குட்படாதது) | 30.09.2022 உள்ளவாறான | 30.09.2021 உள்ளவாறான |
|---|---|---|
| ரூபா மில்லியன்களில் | | |
| **சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 768.56 | 692.52 |
| அரச பத்திரங்கள் | 853.81 | 668.38 |
| தொடர்புடைய கட்சிகளிடமிருந்து பெறவேண்டியவை | 49.01 | 14.13 |
| கடன்கள் (தொடர்புடைய கட்சிகளிடமிருந்து பெறவேண்டியவை தவிரித்து) | 12,023.41 | 12,238.39 |
| பங்குகளில் முதலீடு | 15.01 | 16.53 |
| முதலீட்டுச் சொத்துக்கள் மற்றும் அசையா சொத்துக்கள் | 65.30 | 68.96 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 206.35 | 206.45 |
| ஏனைய சொத்துக்கள் | 2,021.33 | 3,086.82 |
| **மொத்த சொத்துக்கள்** | **16,002.79** | **16,992.20** |
| **பொறுப்புக்கள்** | | |
| வங்கிக்கு செலுத்தவேண்டியவை | 3,997.05 | 4,161.87 |
| தொடர்புடைய கட்சிக்கு செலுத்தவேண்டியவை | 1,297.15 | 616.52 |
| வாடிக்கையாளருக்கு செலுத்தவேண்டியவை | 7,751.71 | 9,395.28 |
| ஏனைய கடன்கள் | - | - |
| ஏனைய பொறுப்புக்கள் | 438.40 | 437.77 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **13,484.32** | **14,611.44** |
| **பங்கு மூலதனம்** | | |
| பிரேரிக்கப்பட்ட மூலதனம் | 1,890.83 | 1,610.83 |
| நியதிச் சட்ட ஒதுக்கு நிதியம் | 88.44 | 76.76 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் | 539.20 | 693.76 |
| ஏனைய ஒதுக்கங்கள் | - | (0.59) |
| **மொத்த பங்கு மூலதனம்** | **2,518.47** | **2,380.76** |
| **பங்கிற்கான தேறிய சொத்து மதிப்பு** | 16.42 | 17.09 |

| தெரிவு செய்யப்பட்ட செயல்திறன் குறிக்காட்டிகள் | 30.09.2022 உள்ளவாறான | | 30.09.2021 உள்ளவாறான | |
|---|---|---|---|---|
| உள்ளடக்கங்கள் | உண்மையான | தேவையானவை | உண்மையான | தேவையானவை |
| **ஒழுங்குபடுத்துதல் மூலதனப் போதுமை (%)** | | | | |
| அடிப்படை மூலதனம் போதுமை விகிதம் | 8.56% | 8.50% | 7.73% | 7.00% |
| மொத்த மூலதன விகிதம் | 17.73% | 12.50% | 12.28% | 11.00% |
| மூலதன நிதியிலிருந்து மொத்த வைப்புப் பொறுப்பு விகிதம் | 32.49% | 10.00% | 25.34% | 10.00% |
| **சொத்துக்களின் தரம் (%)** | | | | |
| மொத்த செயல்படாத கடன் விகிதம் | 35.72% | | 27.76% | |
| தேறிய செயல்படாத கடன்கள் விகிதம் | 22.41% | | 14.05% | |
| அடிப்படை மூலதன விகிதத்திற்கு நிகர செயல்படாத கடன்கள் | 126.29% | | 95.66% | |
| ஏற்பாட்டு பாதுகாப்பு விகிதம் | 37.25% | | 31.18% | |
| **இலாபத்தன்மை (%)** | | | | |
| தேறிய வட்டி இலாபம் | 1.80% | | 41.88% | |
| சொத்துக்களிலிருந்தான வருவாய் | -19.53% | | 16.98% | |
| பங்கு மூலதனத்திலிருந்தான வருவாய் | -17.24% | | 12.45% | |
| வருமான விகிதத்திற்கான செலவு | 214.85% | | 50.54% | |
| **திரவத்தன்மை (%)** | | | | |
| தேவையான திரவ சொத்துகளுக்கு கிடைக்கக்கூடிய திரவ சொத்துக்கள் (குறைந்தபட்சம் 100%) | 138.81% | | 123.98% | |
| வெளிப்புற நிதிகளுக்கான திரவ சொத்துக்கள் | 8.30% | | 8.31% | |
| **விஞ்ஞாபன தகவல்கள்** | | | | |
| கிளைகளின் எண்ணிக்கை | 16 | | 15 | |
| வெளிப்புற கடன் மதிப்பீடு | AA- (lka) RWN | | AA- (lka) Stable | |
| கடந்த 6 மாதங்களில் விதிக்கப்பட்ட ஒழுங்குமுறை அபராதத் தொகை (ரூபா. மில்லியன்) | - | | - | |

**உறுதிப்படுத்தல்**

கீழே கையொப்பமிட்டிருக்கும் றிச்சர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட் இன் பிரதான நிறைவேற்று அலுவலராக, நிதிக் கட்டுப்பாட்டாளராக மற்றும் இணங்குவிப்பு அலுவலாராகவுள்ள நாங்கள் கூட்டாக பின்வருனவற்றை உறுதிப்படுத்துகிறோம்.

(அ) மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட படிவம் மற்றும் வரைவிலக்கணங்களுடன் ஏற்ப இணங்கி செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இந்நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்டவை எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

(ஒப்பம்)
டபுள்யு.எல்.எஸ்.பொன்சேகா
தலைமை நிறைவேற்று அதிகாரி
திகதி : 27/10/2022

(ஒப்பம்)
பி.எச்.எஸ். சுரங்க
நிதி கட்டுப்பாட்டாளர்
திகதி : 27/10/2022

(ஒப்பம்)
ஜெ.கெ.டி.எஸ். துங்கசேன
இணக்க அதிகாரி
திகதி : 27/10/2022

இந்நிதியறிக்கைககள் தயாரித்தல் மற்றும் பிரசுரித்தல் தொடர்பில் பொறுப்புக்கள் பணிப்பாளர் சபையினையே சாரும். பணிப்பாளர் சபை சார்பில் கையெழுத்திடப்பட்டது:

(ஒப்பம்)
கே.பி. வனிகசேகர
தலைவர்
திகதி : 27/10/2022

(ஒப்பம்)
கெ.பி. விஜேரத்ன
பணிப்பாளர்
திகதி : 27/10/2022

**றிச்சர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட்**
நிதி வர்த்தக சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் உரிமம் பெற்றது. Act No:42 of 2011

69, ஆர்பிகோ கம்பளக்ஸ், ஹைட் பார்க் கோனர், கொழும்பு 02.
தொலைபேசி: 011-5900600 | www.rpfinancelk.com

AA-(lka) RWN by Fitch Ratings Lanka Limited.



இந்தியப் பிரதி உயர்ஸ்தானிகர் ஸ்ரீ வினோத் கே.ஜேகப் ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவினருடன் கலந்துரையாடினார். அந்நிலையத்தை மேம்படுத்துவது இந்திய அரசின் அபிவிருத்தித் திட்டங்களில் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இதன்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உப தலைவர் பாரத் அருள்சாமி, ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் வதிவிட முகாமையாளர் விஜேசிங் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது இடம்பெற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

(படங்கள்:- தலவாக்கலை நிருபர்)

## இருமலுடன் புதிய காய்ச்சல் பரவல்

(பலாங்கொடை மேலதிக நிருபர்)

பலாங்கொடை மற்றும் சுற்றுப் பிரதேசங்களில் இருமலுடன் கூடிய புதிய காய்ச்சல் பரவி வருவதால் பொதுமக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளுமாறு வைத்தியர்கள் அறிவுரைகளை வழங்கி வருகின்றனர்.

இந்த காய்ச்சல் காரணமாக இருமலுடன் மயக்கம் வாந்தி மற்றும் தசைகளில் வலி ஏற்பட்டால் உடனடியாக அரச வைத்தியசாலை வைத்தியர்களிடம் சிகிச்சை பெறுமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், கொதித்தாறிய நீரை அருந்துமாறும் சமைத்த உணவு வகைகளை மூடி வைக்குமாறும் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். துண்டுப் பிரசுரங்கள் மற்றும் பொது அறிவுறுத்தல்கள் மூலம் மட்டுமன்றி, வேறு நோய்களுக்கு சிகிச்சைகள் வழங்கும்போதும் இந்த அறிவுறுத்தல்களை வைத்தியர்கள் வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மாத்தளை தேவஸ்தான பிரதம குருக்கள் விபத்தில் மரணம்

(மாத்தளை நிருபர்)



மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான பிரதம சிவச்சாரியார் சிவஸ்ரீ மணி சிவானந்த குருக்கள் நேற்று (24) அதிகாலை அகால மரணமடைந்துள்ளதாக ஆலயத்தின் அறங்காவல் சபையினர் தெரிவிக்கின்றனர்.

இவர் நேற்று 24ஆம் திகதி மாத்தளை ஆலயத்திலிருந்து அங்கும்புர பகுதிக்கு முச்சக்கரவண்டியில் பயணிக்கும்போது விபத்துக்குள்ளாகி மரணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சுமார் 35 வருட காலம் மேற்படி ஆலயத்தில் பிரதம குருவாக செயற்பட்ட இவர், மேற்படி ஆலயத்தில் இவரது குடும்பத்தின் மூன்றாவது பரம்பரையில் பிரதம குருவாக செயல்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. முன்னேஸ்வரத்தை சேர்ந்த இவர் மேற்படி ஆலயம் சம்பந்தப்பட்ட அனைத்து கிரியைகள், பூஜைகள் மற்றும் திருவிழாக்களில் அர்ப்பணிப்போடு செயற்பட்டுள்ளதுடன், ஆலய நிர்வாகத்தினரதும் பொதுமக்களிடத்திலும் மிகவும் கண்ணியத்திற்குரியவராக செயல்பட்டவரென்பதும் குறிப்பிடத்தக்கது. 60 வயதுடைய இவரது இறுதிக்கிரியைகள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்று ஆலய அறங்காவலர் சபையினர் தெரிவித்துள்ளனர்.

## மலையகக் கவிதைகள் குறித்த இரு ஆய்வு நூல்கள் வெளியீடு

(கண்டி செய்தியாளர்)

கண்டி தமிழ் வர்த்தகர் சங்கம் மற்றும் கண்டி முஸ்லிம் வர்த்தகர் சங்கம் என்பவற்றின் ஏற்பாட்டில், தென் கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் எம்.ஏ.எஸ்.எப்.சாதியா பௌசர் எழுதிய மலையகக் கவிதைகள் குறித்த இரு ஆய்வு நூல்களின் வெளியீட்டு விழா கண்டியில் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது.

'மலையகக் கவிதைகளும் மக்களும்', 'மலையகக் கவிதைகளில் பெண்களும், சிறுவர்களும்' ஆகிய ஆய்வுநூல்களே இவ்வாறு வெளியிட்டு வைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வு பேராதனை பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் துரை மனோகரன் தலைமையில் கண்டி டி.எஸ்.சேனாநாயக்க வீதியில் அமைந்துள்ள ஜின்னா நினைவு மண்டபத்தில் பி.ப. 3 மணிக்கு இடம்பெறும்.

இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் செ.யோகராசாவினால் நூல்கள் அறிமுகம் செய்யப்படும். தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா பாராட்டுரையை வழங்குவார். இந்நிகழ்வில் மேலும் பல பிரமுகர்கள் உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



திகன கலவரத்தின் உண்மையைக் கண்டறியும் பிரஜைகள் ஆணைக்குழு அறிக்கையின் விதந்துரைகள் குறித்த கலந்துரையாடல் கண்டி மாவட்ட சர்வமதக்குழுவின் ஏற்பாட்டில் கண்டி குயின்ஸ் ஹோட்டலில் இடம்பெற்றது. திகன கலவரம் இடம்பெற்று 4 வருடங்களுக்கு மேல் கடந்துவிட்டபோதும் ஆணைக்குழுவின் ஆலோசனைகள் இன்னும் அமுல்படுத்தப்படவில்லை என்று அங்கு சுட்டிக்காட்டப்பட்டது. இது இன நல்லிணக்கத்திற்கு காத்திரமான ஒன்றாக இருக்க முடியாது எனவும் அது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், எதிர்காலத்தில் சமூகங்களைப் பாதுகாப்பதற்கு இந்த அறிக்கை மிக முக்கியமானது எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியத்தின் உள்ளூர் பிரதிநிதிகள் மற்றும் கண்டி மாவட்ட சர்வமதக்குழு உறுப்பினர்கள் இதில் பங்குகொண்டனர். இதன்போது இடம்பெற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

(படங்கள்:- கண்டி நிருபர்)

## நிறைவேறியது வலி. தெற்குப் பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம்



(யாழ். நிருபர்)

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான விசேட கூட்டம் நேற்று முன்தினம் (23) காலை 09.30 மணிமுதல் சபையின் மாநாட்டு மண்டபத்தில் தவிசாளர் கருணாகரன் தர்சன் தலைமையில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் தவிசாளர் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சபையில் சமர்ப்பித்து உரையாற்றினார். இதனையடுத்து சபை அமர்வில் கலந்துகொண்ட சபை உறுப்பினர்கள் அனைவரும் வரவு-செலவுத் திட்டம் தொடர்பான தமது கருத்துகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் தவிசாளரால் சபையின் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. சபையில் அங்கம் வகிக்கும் 30 உறுப்பினர்களில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 2 உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வருகை தரவில்லை.

இந்நிலையில், சபைக்கு வருகை தந்த 28 உறுப்பினர்களில் ஆளும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 11 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த 6 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 3 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த 2 உறுப்பினர்களும் என 26 உறுப்பினர்கள் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்ததுடன், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 2 உறுப்பினர்கள் நடுநிலமையாகவும் செயற்பட்டனர்.

இதன்மூலம் வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 26 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை, விசேட கூட்டத்தைத் தொடர்ந்து வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டமும் இடம்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## வல்வெட்டித்துறை தீருவிலில் சிரமதானத்திற்கு இராணுவம் தடை



(யாழ். நிருபர்)

வல்வெட்டித்துறை தீருவில் பகுதியில் இராணுவத்தினரின் கடும் எதிர்ப்பையும் மீறி மாவீரர் தின நினைவேந்தலுக்காக சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள தீருவில் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை (22) சிரமதானப்பணி இடம்பெற்றது.

இதன்போது இதனருகில் சிதைவடைந்திருந்த நினைவிடத்தின் அருகே இருந்த பற்றைகளை வெட்ட முற்பட்டபோது இராணுவத்தினர் அதற்கு அருகில் எதுவும் செய்யமுடியாது என அறிவுறுத்தினர்.

இதனையும் மீறி பற்றை துப்புரவு செய்யப்பட்டது. இதன்போது இராணுவத்தினர் ஒளிப்படம் எடுத்து அச்சுறுத்தினர். இதன்போது இராணுவத்தினரும், பொலிஸாரும் சிரமதானத்தை தடுக்க முற்பட்டனர். தீருவில் மைதானத்தில் மட்டுமே உங்களுக்கு நகரசபை அனுமதி உள்ளது. ஆனால், புலிச்சின்னங்கள் மீது எதையும் செய்யவேண்டாம் என அச்சுறுத்தியதுடன், ஒளிப்படங்கள் மூலம் அனைவரையும் புகைப்படம் எடுத்தனர்.

தற்போது நான்கு இராணுவத்தினர் தொடர்ச்சியாக அங்கு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## விடுதலைப் புலிகள் தலைவரின் பூர்வீக வீட்டுக்குப் பாதுகாப்பு

(யாழ். நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த நாள் 26ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள நிலையில், வல்வெட்டித்துறையிலுள்ள அவரது பூர்வீக வீட்டைச் சூழவுள்ள பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அப்பகுதியில் இராணுவத்தினர், பொலிஸார், புலனாய்வுப் பிரிவினர் பெருமளவில் குவிந்து பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர்.

அதேவேளை, வல்வெட்டித்துறை தீருவில் பகுதியிலுள்ள மாவீரர் நினைவிடத்தினை சிரமதானம் மூலம் துப்புரவு செய்ய இராணுவத்தினர் தடை விதித்தனர்.

இராணுவத்தின் தடைகளை மீறி துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டபோது, துப்புரவு பணிகளை மேற்கொண்டவர்களை இராணுவத்தினர் ஒளிப்படங்கள் எடுத்து அச்சுறுத்தும் பாணியில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஒஸ்மானியா கல்லூரி உடற்பயிற்சி ஆசிரியர் மீது தாக்குதல் மேற்கொண்டவர் பொலிஸில் சரண்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி உடற்பயிற்சி ஆசிரியரை தாக்கிய குற்றச்சாட்டில் தேடப்பட்டுவந்த அப்பாடசாலை மாணவனின் தந்தை நேற்று முன்தினம் (23) யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

ஒஸ்மானியா கல்லூரிக்குள் கடந்த செவ்வாய்க்கிழமை அத்துமீறி நுழைந்து ஆசிரியர் மீது தாக்குதலை மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்ததுடன், சந்தேக நபரை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் சந்தேகநபர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு சென்று சரணடைந்துள்ளார்.

அதேவேளை, சந்தேக நபரை கைதுசெய்ய வேண்டும் என கல்லூரி ஆசிரியர்கள் நேற்று முன்தினம் கற்பித்தல் செயற்பாடுகளை புறக்கணித்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## கந்தர்மடத்தில் மோட்டார்சைக்கிள் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு!

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கந்தர்மடத்தை சேர்ந்த க. செரிஸ்டன் (வயது 49) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவர் செலுத்திய மோட்டார்சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மன்னாரில் சந்நிதியான் ஆச்சிரமத்தால் உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு

(சாவகச்சேரி நிருபர்)



சந்நிதியான் ஆச்சிரமத்தால் கடந்த செவ்வாய்க்கிழமை (22) மன்னார் பெரியமுறிப்பு கிராமத்திலுள்ள தேவைப்பாடுடைய 95 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

சிறுவர்களை உள்ளடக்கிய கூலித் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கே இவ்வாறு 4,50,000 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கப்பட் டுள்ளன.

குறித்த உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரமத்தைச் சேர்ந்த மோகனதாஸ் சுவாமிகள், சமூக செயற்பாட்டாளர்களான இ.தயாபரன், அந்தோனி ஜேம்ஸ் ஆகியோர் கலந்துகொண்டு உலருணவுப் பொதிகளை வழங்கினர்.

## வவுனியாவில் கோர விபத்து; 10 பேர் காயம்

(வவுனியா நிருபர்)

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் நேற்றுக் (24) காலை 5.30 மணியளவில் பஸ் – ரிப்பர் மோதிக்கொண்ட விபத்தில் ரிப்பர் சாரதி மற்றும் பஸ்ஸில் பயணித்த பயணிகள் உட்பட பத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

தங்காலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பஸ்ஸும் மாங்குளத்திலிருந்து கனகராயன்குளம் நோக்கிச் சென்ற ரிப்பரும் மோதிக்கொண்டதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் ரிப்பர் வாகன சாரதி உட்பட பஸ்ஸில் பயணித்த பயணிகள் உள்ளிட்டோர் காயமடைந்த நிலையில், 6 பேர் மாங்குளம் வைத்தியசாலையிலும் 4 பேர் வவுனியா வைத்தியசாலையிலும் சிகிச்சைகளுக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கனகராயன்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்கள் கண்காட்சி - விற்பனை

(யாழ். நிருபர்)

ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்கள் கண்காட்சியும் விற்பனையும் எங்கட புத்தகங்கள் அமைப்பால் எதிர்வரும் 6 மற்றும் 7ஆம் திகதிகளில் பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

ஈழத்து எழுத்தாளர்களின் ஆயிரத்துக்கும் அதிகமான புத்தகங்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வடமராட்சி பிரதேச நூலகங்கள் மற்றும் சனசமூக நிலையங்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கண்காட்சிக்கு வருகைதந்து பயன்பெறவேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாக உள்ளது.

அதுமட்டுமல்லாமல், நூலகங்கள் மற்றும் சனசமூக நிலையங்கள் தமக்குத் தேவையான புத்தகங்களை தெரிவுசெய்து கொள்வனவு செய்ய இது ஒரு சிறந்த வாய்ப்பு.

ஆகவே, வடமராட்சி பிரதேச பாடசாலைகள், நூலகங்கள் மற்றும் சனசமூக நிலையங்களுக்கு மேற்படி கண்காட்சி தொடர்பில் அறிவித்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.



# வணிக உலகம் Business world

www.thamilan.lk

## இணையவழி கொள்வனவுகளுக்கு இந்த நவம்பர் மாதம் Dialog வழங்கும் நம்பமுடியாத விலைக்கழிவுகள்

இம்முறை 11.11 மற்றும் Black Friday நிகழ்வுகளை முன்னிட்டு Dialog.lk உங்களுக்காக சில பிரத்தியேக சலுகைகள் மற்றும் விலைக்கழிவுகளை வழங்கிவருகின்றது. நீங்கள் ஒரு புதிய Home Broadband அல்லது TV இணைப்பைப் பெற்றுக்கொள்ள எண்ணியிருந்தாலோ அல்லது தற்போது வைத்திருக்கும் ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிக்குப் பதிலாக புதிய கையடக்கத் தொலைபேசி ஒன்றை பெற்றுக்கொள்ள எண்ணியிருந்தாலோ அல்லது சிறப்பு சலுகைகளை எதிர்பார்க்கிறீர்கள் என்றாலோ உங்களுக்கான தருணம் இதுவே.

Dialogஇன் Online Store (www.dialog.lk) வழியாக Dialog Home Broadband, Dialog Television மற்றும் புத்தம் புதிய ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகள் மீது நவம்பர் மாதம் முழுவதும் பிரத்தியேக விலைக் கழிவுகளைப் பெற்றுக்கொள்ளலாம். கவர்ச்சிகரமான சலுகைகள் மற்றும் பிரத்தியேக விலைக்கழிவுகள் மட்டுமல்லாமல், இணையவழி மூலமாக நீங்கள் மேற்கொள்ளும் அனைத்து கொள்வனவுகளுக்கான விநியோகம் நாடு முழுவதிலும் இலவசமாக வழங்கப்படும். ஆதலால் உங்கள் பொன்னான நேரத்தையும் பணத்தையும் நீங்கள் வீதிகளில் நின்று செலவழிக்கத் தேவையில்லை. நீங்கள் செய்யவேண்டியது ஒன்று மட்டுமே. www.dialog.lk இற்கு சென்று உங்கள் ஆர்டரை பதிவுசெய்யுங்கள்.மேலும், டயலொக்கின் 11.11 கொடுப்பனவு மூலம் ரூ. 5,990 பெறுமதியான Dialog Home Broadband இணைப்பை ரூ. 2,990இற்கு நீங்கள் பெறலாம். அத்தோடு, Apple iPhone மற்றும் Samsung Galaxy S22 Ultra உள்ளிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகள் உட்பட ஏனைய பொருட்களுக்கு 2022 நவம்பர் 30 வரை 38% வரையான விலைக்கழிவுகளும் வழங்கப்படும்.

## மஹிந்ரா ஐடியல்/பினான்ஸ் கட்டுகஸ்தோட்டையில் புதிய கிளையுடன் மலைநாட்டில் தனது இருப்பை விரிவுபடுத்துகிறது







கிராமப்புற மற்றும் அரை நகர்ப்புறத் துறைகளுக்கு நவீன, சௌகரியமான மற்றும் அணுகக்கூடிய நிதியியல் தீர்வு தயாரிப்புகள் மற்றும் சேவைகளை கிடைக்கச் செய்யவேண்டும் என்பதில் தான் கொண்டுள்ள அதீத ஆர்வத்தால் உந்தப்பட்டு, மஹிந்ரா ஐடியல் / பினான்ஸ் லிமிட்டெட் அதன் புதிய கட்டுகஸ்தோட்டை கிளையை திறந்து வைத்துள்ளமையை மகிழ்ச்சியுடன் அறியத்தந்துள்ளது.

214, மடவல வீதி, கட்டுகஸ்தோட்டை என்ற முகவரியில் அமைந்துள்ள மஹிந்ரா ஐடியல் / பினான்ஸ் கட்டுகஸ்தோட்டை கிளையானது நாடளாவிய ரீதியில் வளர்ந்துவரும் இந்நிறுவனத்தின் கிளை வலையமைப்பில் 22ஆவது வரவாகும். பெறுமதிமிக்க வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், விசேட அதிதிகள் மற்றும் மஹிந்திரா ஐடியல் / பினான்ஸின் சிரேஷ்ட முகாமைத்துவ அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோரின் முன்னிலையில் இடம்பெற்ற விசேட வைபவத்தின் மத்தியில் புதிய கட்டுகஸ்தோட்டை கிளை திறந்துவைக்கப்பட்டது. இப்புதிய கிளையானது கட்டுகஸ்தோட்டை மற்றும் கண்டி மாநகர் பிரதேசத்தின் பகுதிகள் உட்பட அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்கும்.

## செயற்பாட்டு ரீதியாக வலுவான கொமர்ஷல் வங்கி குழுமம், விவேகமான ஏற்பாடுகளுக்கு மத்தியில் ஆரோக்கியமான முன்னணி வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது

COMMERCIAL BANK



நாட்டில் தொடர்ந்து வரும் பல்வேறுவிதமான நுண் பொருளியல் காரணங்களின் நடுவே கொமர்ஷல் வங்கி குழுமம் முதல் ஒன்பது மாதங்களிலும் அதேபோல் மூன்றாவது காலாண்டு இறுதியிலும் வலுவான செயற்பாடுகளை வெளிப்படுத்தி உள்ளது. இந்த பொருளாதார காரணிகள் 2022 செப்டெம்பர் 30ஆம் திகதியில் முடிவடைந்த ஒன்பது மாத காலத்தில் மும்மடங்கு குறைபாட்டு ஒதுக்கீடுகளுக்கான தேவைகளையும் ஏற்படுத்தியுள்ளன. இதனால் கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியையும் இவ்வாண்டின் இதே காலப்பகுதியில் ஒப்பீட்டளவிலும் காலாண்டுக்கான இலாபம் குறைந்துள்ளது. எவ்வாறேனும் மூன்றாவது காலாண்டில் நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரிக்கு (VAT) முந்திய செயற்பாட்டு நட்டம் மீளப் பெறப்பட்டுள்ளதாக வங்கி அறிவித்துள்ளது. இந்தத் தொகை இரண்டாம் காலாண்டு முடிவில் 3.581 பில்லியன்களாக இருந்தது. பாதிக்கப்பட்ட வர்த்தகங்கள் மற்றும் தனிநபர்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களுக்கு இசைவாக மற்றும் வங்கிக்கே உரிய திட்டங்கள் என்பனவற்றின் கீழ் நிவாரணங்கள் வழங்கப்பட்ட பின்னர் இந்த சாதனைகள் எட்டப்பட்டுள்ளன. உலகளாவிய நோய் பரவல் நிலைமையை அடுத்து கடன் வசதிகளை மீளச் செலுத்துவதற்கான நெறிமுறைகளை பின்போடல், தகுதியான கடன்கள் மீதான வட்டிச் சலுகைகள், சில கட்டணங்களைக் கைவிடல் என்பன இந்த நிவாரணங்களில் அடங்கும் என வங்கி அறிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கியுடன் அதன் கிளைகள் மற்றும் இணை நிறுவனங்களின் மொத்த குழுமமும் 2022இல் முதல் ஒன்பது மாத காலத்தில் ரூ.195.573 பில்லியன்களை மொத்த வருமானமாகப் பதிவுசெய்துள்ளது. இதில் ரூ.76.056 பில்லியன்கள் மூன்றாவது காலாண்டுக்குரியது. இது முறையே 62.91% மற்றும் 89.58% துரித முன்னிலை வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.

## CEA மற்றும் உள்ளூர் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பல்லுயிர் மீளுருவாக்கம் முயற்சிகளை வலுப்படுத்தும் Hayleys Fabric



பல்லுயிர் மீளுருவாக்கம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேற்கொள்வதற்கான அதன் உறுதிப்பாட்டை வலுப் படுத்தும் முகமாக ஹேலிஸ் குழுமத்தின் துணை நிறுவனம் மற்றும் முன்னணி ஜவுளி உற்பத்தியாளரான Hayleys Fabric மத்திய சுற்றாடல் அதிகாரசபை (CEA) மற்றும் பெந்தோட்டை ஆற்றின் கிளை நதிகளுடன் இணைக்கப்பட்ட வாழ்விடங்களைப் பாதுகாப்பதை மேம்படுத்த பேராதனை மற்றும் வயம்ப பல்கலைக் கழகங்களுடன் கூட்டிணைந்துள்ளது. 1.5 மில்லியன் ரூபா பெறுமதியான இந்த முயற்சியானது இஹல ஹெவஸ்ஸ, கலுதொல மற்றும் கலுகல கங்கைகளின் ஆற்றங்கரைகளை ஸ்திரப்படுத்துவதை இலக்காகக் கொண்டு அழிந்துவரும் மூன்று Ketal (லகேனந்திரா) இனங்களின் பாதுகாப்பு மற்றும் மீளுருவாக்கம் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## Bodylineஆனது 30 ஆண்டுகளாக 30 30 CSR முயற்சிகளுடன் தனது சமூகத்தைப் பலப்படுத்தி வருகிறது



தெற்காசியாவின் மிகப்பெரிய ஆடை தொழில்நுட்பக் குழுவான MAS Holdingsஇன் துணை நிறுவனமான மற்றும் முன்னணி ஆடை உற்பத்தியாளரான Bodyline (Pvt) Ltd, தனது 30ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. இந்த 30 ஆண்டுகால சமூகப் பொறுப்பின் மூலம் அவர்கள் தங்கள் சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.30 ஆண்டுகளாக Bodyline பல்வேறு சமூகப் பொறுப்புணர்வு முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது,

அதன்மூலம் அதன் ஊழியர் சமூகங்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு தமது அர்ப்பணிப்பை உறுதிசெய்துள்ளது. மேலும், Bodyline தனது பங்களிப்பை மனிதன் மற்றும் உலகம் என்ற எண்ணக்கருவின் அஸ்திவாரத்தின் மீது கட்டமைக்கப்பட்ட புதிய முயற்சிகளுடன் அதிகரிக்க விரும்புகிறது. தேவைப்படும் சமூகங்களுக்கு உதவ உள்ளக குழுக்களுக்கு வாய்ப்பளிப்பதன் மூலம் பணியாளர் ஈடுபாட்டை வலுப்படுத்துகிறது.

## பஜாஜ் ஜெனுயின் பார்ட்ஸ் விலைக் குறைப்பு




நாட்டில் நிலவும் இறக்குமதிக் கட்டுப்பாடு காரணமாக பிராண்ட் நியூ வாகனங்கள் இலங்கையில் இல்லாதிருக்கும் சூழ்நிலையில் தம்மிடம் காணப்படும் தற்பொழுது பயன்பாட்டிலுள்ள வாகனத்தை உரிய வகையில் பராமரிப்பதற்கே அனைவரும் முன்னுரிமையளித்துள்ளனர். இதற்கு உதிரிப்பாகங்கள் மற்றும் துணைக் கருவிகள் அவசியமாகின்றபோதும், கடந்த சில மாதங்களில் நாணயமாற்று வீதத்தில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக சகல வகையான வாகனங்களினதும் அசல் உதிரிப்பாகங்களின் விலை அதிகரித்துள்ளது.

இதற்கிடையில் விற்பனையின் பின்னரான சேவைக்காக அர்ப்பணிப்புடன் உள்ள டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடெட் இந்நாட்டில் பஜாஜ் வாகன உரிமையாளர்களுக்கு நற்செய்தியைக் கொண்டுவந்திருப்பதுடன், பஜாஜ் ஜெனுயின் ஸ்பெயார் பார்ட்ஸ் விலைகளைக் கணிசமானளவு குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

## Sensa Solutions Lanka நிறுவனத்துக்கு 7 LBA விருதுகள்



பொதியிடல் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள முன்னணி நிறுவனமான Sensa Solutions Lanka தனியார் நிறுவனம், Lanka Business Awards (LBA) விருது வழங்கும் விழாவில் சிறிய மற்றும் மத்திய அளவிலான பிரிவில் 07 விருதுகளை வென்றுள்ளது. அந்த வகையில் நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி சசிரு நவோதி ஆண்டின் சிறந்த பெண் தொழில்முயற்சியாளர் விருதையும் முகாமைத்துவப் பணிப்பாளர் சுபாஸ் தலங்கம ஆண்டின் சிறந்த இளம் தொழில்முயற்சியாளர் விருதையும் பெற்றுக்கொண்டனர். ஆண்டின் சிறந்த சூழல்நேய தொழில்முயற்சி, ஆண்டின் வேகமாக வளர்ந்துவரும் தொழில்முயற்சி, ஆண்டின் சிறந்த அச்சு நிறுவனம் ஆகிய விருதுகளையும் Sensa Solutions Lanka நிறுவனம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. Business World International Organization (BWIO) ஏற்பாடு செய்த மேற்படி விருது விழா கொழும்பு கிராண்ட் ஓரியன்டல் ஹோட்டலில் அண்மையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

## JAT Pintharoo Shilpee Abhiman 1ஆவது பட்டமளிப்பு விழாவில் 100இற்கும் மேற்பட்ட பட்டதாரிகளுடன் மரப்பூச்சுகள் தொழிற்துறையில் சாதனை நிலைநாட்டப்பட்டுள்ளது



திறமையான, ஆனால், முறையான சான்று அங்கீகாரத்தைக் கொண்டிராத நபர்களுக்கு தமது தொழில்துறையை மேம்படுத்தி, வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு தமது கைவினைத்திறனை மேம்படுத்தி, மிகவும் நம்பிக்கையூட்டும் தீந்தை பூசுபவர்கள் மற்றும் தச்சுவேலை செய்பவர்களுக்கு உதவி, இத்தொழில்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் (NAITA) கூட்டாண்மையுடன், இலங்கையில் மரப்பூச்சுகள் துறையில் சந்தையில் முன்னிலை வகித்து வருகின்ற JAT Holdings PLC நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு முன்னோடி நிகழ்ச்சித்திட்டமே JAT Pintha roo Shilpee Abhiman என்பதாகும்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ், NAITA நடத்திய பரீட்சையொன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவுடன், தேசிய தொழிற்திறன் தகைமை (NVQ) நிலைமட்டம் 3 மரக் கைவினைஞர் (மரவேலைப்பாட்டை பூர்த்திசெய்பவர்) சான்றிதழுடன் JAT Holdings மூலம் அடையாளம் காணப்பட்ட 100இற்கும் மேற்பட்ட தீந்தை பூசுபவர்கள் மற்றும் மரவேலை செய்பவர்களுக்கு அங்கீகாரத்தை NAITA வழங்கியுள்ளது. மிகவும் திறமையான நபர்களுக்கு சான்றிதழை வழங்கு வதற்கான இத்தகைய அளவில் முதன்முதலாக முன்னெடுக்கப்பட்ட ஒத்துழைப்புத் திட்டமாக இது அமைந்துள்ளதுடன், இது JAT Holdings நிறுவனத்திற்கு மட்டுமல்லாது, ஒட்டுமொத்த தொழில்துறையைப் பொறுத்தவரைக்கும் ஒரு சாதனை இலக்காக மாறியுள்ளது.

## 'சஹசக் நிமவும்' புத்தாக்கப் போட்டியில் UTECH டெக்னொலொஜிஸ் நிறுவனத்துக்கு உயரிய விருது



நான்காவது கைத்தொழில் புரட்சியை (Industry 4.0) சிறப்பாக எதிர்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்வதற்கு உதவிய ளிக்கும் இலங்கையின் முன்னணி தகவல் மற்றும் தொடர்பாடல் நிறுவனமான UTECH டெக்னொலொஜிஸ் நிறுவனம் (www.utech.lk) 'சஹசக் நிமவும்' புத்தாக்க விருது விழாவில் வழங்கப்படுகின்ற உயரிய விருதான DASIS விருதை வென்றுள்ளது. சகல போட்டிப் பிரிவுகளையும் கருத்திற்கொண்டு தொழில்நுட்பத்தின் புத்தாக்கத் தன்மையையும் சந்தையின் வெற்றியையும் பதிவுசெய்துள்ள உற்பத்திகளுக்கு மாத்திரமே DASIS விருது வழங்கப்படுகிறது.

## செலான் வங்கி உத்தியோகபூர்வ வழிகளினூடாக வெளிநாட்டுப் பண அனுப்புகைகளை மேற்கொள்வதற்கு தனது பிரத்தியேகமான அல்பர்ட் அங்கிள் கதாபாத்திரத்தை மீளமைத்துள்ளது




இலங்கையில் முதன்முறையாக முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தினூடாக தெரிவுசெய்யப்படும் பதினைந்து அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்களுக்கு பிரத்தியேகமான டிஜிட்டல் பரிசு வழங்கப்படும்

அன்புடன் அரவணைக்கும் வங்கி, செலான் வங்கி. மக்கள் மத்தியில் பிரபல்யமடைந்திருந்த வெஸ்டர்ன் யூனியனின் பணப்பரிமாற்றல் சேவை தொலைக்காட்சி விளம்பரத்தின் அல்பர்ட் அங்கிள் கதாபாத்திரத்தை மீளமைப்பதற்கு முன்வந்துள்ளது. இதனூடாக உத்தியோகபூர்வ நாளிகைகளினூடாக வெளிநாட்டுப் பண அனுப்புகைகளை ஊக்குவிக்க செலான் வங்கி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இரண்டு தசாப்த காலப்பகுதிக்கு முன்னர் விளம்பரம் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு செய்யப்பட்டிருந்ததுடன், திருமண தினத்தன்று தொலைந்த மோதிரத்துக்குப் பதிலாக மாற்று மோதிரமொன்றை கொள்வனவு செய்வதற்கு அவசரமாக ரூ. 50,000 பணத்தை வெஸ்டர்ன் யூனியன் ஊடாக சுரேஷுக்கு அல்பர்ட் அங்கிள் அனுப்பி உதவுவதாக இந்த விளம்பரம் அமைந்திருந்தது. அன்றுமுதல் இந்த அல்பர்ட் அங்கிள் யார் என்பது இரகசியமாகவே இருந்து வந்துள்ளதுடன், வெளிநாடுகளிலிருந்து பணத்தைப் பெறுவதற்கு மக்கள் மத்தியில் பரவலாக பேசப்படும் ஒரு கதாபாத்திரமாகவும் அமைந்துள்ளது.

## நாடு முழுவதும் பெண்களுக்கான தொழில்முனைவுத் திட்டங்களை ஊக்குவிக்கும் AIA






பெண்கள் தொழிற்துறை மற்றும் வர்த்தக சம்மேளனத்தினால் (WCIC) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த WCIC பிரதிபாபிஷேக பெண்கள் தொழில்முனைவோருக்கான விருதுகள் 2022இற்கான கோல்ட் அனுசரணையாளராக AIA இன்ஷூரன்ஸ் செயற்படுவதோடு, இலங்கையில் 2022-2023 காலப்பகுதியில் பெண்களுக்கான தொழில்முனைவுத் திட்டத்தை ஊக்குவிப்பதே WCIC நிகழ்வின் மூலோபாய மாகும்.

பல தசாப்தங்களாக பெண்களுக்கு அதிகாரமளித்தல், அவர்களின் தொழில் முனைவுக்கு உதவுதல் மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பு விடயங்களில் கவனம் செலுத்தல் ஆகியவற்றை ஊக்குவிக்கும் ஒரு நிறுவனமாகத் திகழும் AIA, WCICஇன் குறிக்கோள்களுடனான ஒரு பொதுவான நோக்கம் மற்றும் அதன் இயற்கையான ஒருங்கிணைவு ஆகியவற்றைப் பெரிதும் அவதானிக்கின்றது.

இலங்கை முழுவதும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் அவர்களின் நிதியியல் உறுதிப்பாட்டை நிலைநிறுத்தல் ஆகியவற்றுக்குப் பெருமளவு பங்களிப்புச் செய்யும் தேசிய அளவிலான ஓர் அமைப்பாக WCIC செயற்படுகின்றது. AIAஇன் 'ma சுரக்கின AIA' திட்டமானது பெண்கள் ஊழியர்களாகவோ, முகவர்களாகவோ, வாடிக்கையாளர்களாகவோ அல்லது பொதுமக்களாகவோ என எவராக இருந்தாலும் அவர்களின் முன்னேற்றத்திலும், பொருளாதாரச் சுதந்திரத்திலும் பங்களிப்புச் செய்கின்றது. AIAஇன் WCIC உடனான ஒத்துழைப்புடனான கூட்டாண்மையின் மூலமாக பெண்களுக்குக் காப்புறுதித் தீர்வுகள், நிதி கல்வியறிவுப் பயிற்சிகள், வலையமைப்புகள், அங்கீகாரம் மற்றும் தகவல்களை அணுகுதல் மூலமாக இலங்கையிலுள்ள பெண்களின் வாழ்க்கையில் அர்த்தமுள்ள நேர்மறையான விளைவினை ஏற்படுத்துவதற்கு இது பெரிதும் உதவுகின்றது.

## நவீன தொழில்நுட்பத்துடனான Light & Shade காட்சியகம் கல்கிஸையில் திறப்பு




உயர்ந்த மட்டத்திலான Blinds மற்றும் Shades ஆகியவற்றுக்கு இலங்கை சந்தையில் முன்னணியாளராகத் திகழும் Light & Shadeஇனால் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய நான்காவது வாடிக்கையாளர் காட்சியகம், 170, காலி வீதி, கல்கிஸை என்ற முகவரியில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. One Galleface, நாவலை மற்றும் கண்டி ஆகிய பிரதான நகரங்களை மையமாகக்கொண்டு Light & Shade இன் காட்சியகங்கள் காணப்படுகின்றன.

அதன் நவீன காட்சியகங்கள் விஸ்தரிக்கப்பட்டமை குறித்துக் கருத்துத் தெரிவித்த Light & Shade இன் பிரதம நிறைவேற்று அதிகாரிஇர்ஷாட் அக்தர் குறிப்பிடுகையில், "எமது உற்பத்திகள் மற்றும் சேவைகளை நிறுவன மற்றும் வர்த்தக ரீதியில், வீட்டு அலங்கரிப்புகள் தொடர்பான அன்றாட வாடிக்கையாளர்கள் இலகுவில் அணுகக்கூடிய வகையில் விஸ்தரிக்கக் கிடைத்தமை குறித்து பெரும் மகிழ்ச்சியடைகின்றோம். Light & Shade தொழில்முனைவோர், பிரபலங்கள், தொழில்வல்லுநர்கள் மற்றும் உள்ளக மற்றும் வெளியக அலங்கார நிபுணர்களைக்கொண்ட விசுவாசமான வாடிக்கையாளர்களைக் கொண்டிருப்பதுடன், அதிநவீன அல்லது எளிமையான, வசதியான வாழ்க்கையின் பிரதிபலிப்பாக இருந்தாலும், தங்களின் சொந்த அல்லது வாடிக்கையாளரின் வாழ்க்கை முறையை நிறைவுசெய்யும் சூழலை உருவாக்கும் வாய்ப்பை ஏற்படுத்துகிறது. புதிய காட்சியகம் வாடிக்கையாளர்களுக்கு மிகவும் அனுபவம் வாய்ந்த விற்பனை ஆலோசகருடன் நேரடியாகக் கதைப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகிறது" - என்றார்.

## The Business School நிறுவனத்துக்கு சிறந்த தொழில்முயற்சியாளருக்கான தெற்காசிய விருது




இலங்கையில் முதல் தடவையாக உருவாக்கப்பட்ட தொழில்முயற்சியாளர்களுக்கான நேர்மறை சிந்தனை கல்லூரி எனப்படும் வர்த்தகக் கல்லூரி The Business School (TBS) நிறுவனம், South Asian Partnership Summit (SAPS) ஏற்பாடுசெய்த தெற்காசியாவின் சிறந்த தொழில்முயற்சியாளர் 2022 விருது விழாவில் கல்வி, கற்பித்தல் மற்றும் அபிவிருத்திப் பிரிவில் கலை மற்றும் கைத்தொழில் வடிவத்துடன் கூடிய சிறந்த கல்வி நிறுவனம் என்ற விருதை வென்றுள்ளது.

மேற்படி விருது விழா பங்களாதேஷின் டாக்கா நகரில் அண்மையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

TBS நிறுவனம் இதற்கு முன்னரும் CNCI உள்ளிட்ட ஏராளமான விருதுகளை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி கல்லூரியின் அதிபர் துசார திசாநாயக்க மற்றும் உதவி முகாமையாளர் செல்வி சமாலி குணவர்தன ஆகயோர் தமக்கான விருதைப் பெற்றுக்கொண்டனர்.

## ஆண்டின் சிறந்த வர்த்தகநாமமாக LBA விருதை வென்ற MNகுழுமம்



எமது நாட்டு கட்டுமானத்துறையின் முதன்மையான நிறுவனமான MN குழுமம், Business Awards (LBA) விருது வழங்கும் விழாவில் மத்திய அளவிலான பிரிவின் ஆண்டின் சிறந்த வர்த்தகநாமம் என்ற விருதை வென்றுள்ளது. Business Word International Organization (BWIO ஏற்பாடு செய்த LBA விருது விழா கொழும்பு கிராண்ட் ஓரியன்டல் ஹோட்டலில் அண்மையில் வெகு விமரிசையாக நடைபெற்றது. அதன் போது MN குழுமத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரொசான் மேற்படி விருதை பெற்றுக்கொண்டார். MN குழுமம் தற்போது மூன்று நிறுவனங்களை கொண்டதொரு குழுமமாக திகழ்கிறது. வீடுகள் மற்றும் பொது கட்டட நிர்மாணத்துக்கு MN Developer தனியார் நிறுவனம், பாரியளவிலான கட்டுமானத் திட்டங்களுக்கு MN Property Developer தனியார் நிறுவனம் மற்றும் கட்டட நிர்மாணத்துக்கு தேவையான மூலப்பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு MN Multi Trading தனியார் நிறுவனம் ஆகியவையே மேற்படி மூன்று நிறுவனங்களுமாகும். தற்போது வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு தமது தாய்நாட்டில் வீடுகளை நிர்மாணித்துத் தரும் திட்டமொன்றை நிறுவனம் தொடங்கியுள்ளதோடு அதற்கு மக்கள் மத்தியிலேயே ஏகோபித்த வரவேற்பு கிடைத்துள்ளது. வெளிநாடுகளில் உழைக்கும் பணத்தை முதலீடு செய்வதற்கு இத் திட்டம் சிறந்த வாய்ப்பாகும்.

# அட்டப்பள்ளத்தில் கலப்பட இரசாயனப் பசளை தயாரிப்பு நிலையம் இராணுவத்தினரால் முற்றுகை

## 1.5 டொன் எடையுள்ள போலி இரசாயனப் பசளைகள் மீட்பு | சந்தேகநபர்கள் ஐவர் கைது



(திகாமடுல்ல நிருபர்)

நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டப்பள்ளம் பிரதேசத்தில் உள்ள அரிசி ஆலை ஒன்றில் மறைத்து வைத்து கலப்படம் செய்யப்பட்ட 1.5 டொன் எடையுள்ள போலி இரசாயனப் பசளைகளை இராணுவப் புலனாய்வு பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று (24) மதியம் இடம்பெற்றுள்ளது. அக்கரைப்பற்று இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து இராணுவப் புலனாய்வு பிரிவினருடன் திருக்கோயில் விசேட அதிரடிப்படை அதிகாரி ஐ.பி.கன்னங்கர தலைமையிலான குழுவினரே குறித்த பிரதேசத்தில் பதுங்கியிருந்து இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இந்த திடீர் சுற்றிவளைப்பின்போது MOP எனும் பெயரில் போலியாக கலப்படம் செய்து விற்பனைக்கு பொதிசெய்யப்பட்டுக் கொண்டிருந்த கலப்படமான இரசாயன பசளைகளை அதிரடிப்படையினர் கைப்பற்றியதுடன், சந்தேகத்தின் பேரில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனுமதியளிக்கப்பட்ட பசளையுடன் உப்பு மற்றும் இதர பொருட்களை சட்டவிரோதமாக கலந்து பொதிசெய்து கொண்டிருக்கும் சந்தர்ப்பத்திலேயே இவர்கள் கையும் மெய்யுமாக கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், குறித்த சட்டவிரோத பசளையும் கைப்பற்றப்பட்டு களஞ்சியசாலைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டவிரோத இரசாயன பசளை கலவை இடம்பெற்ற அரிசி ஆலை கல்முனைக்குடியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு சொந்தமானது என தெரியவந்துள்ளது.

அத்துடன் இங்கு போலியாக கலப்படம் செய்யப்படும் பசளைகளை பொதி செய்வதற்காக அரச இலட்சினை பொறிக்கப்பட்டு தயார் நிலையில் இருந்த பக்கெட்டுகளும் பசளை பைகளும் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஐவரையும் சட்டவிரோத பசளையையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த தேவையான நடவடிக்கைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இப்பிரதேசத்தில் போலியான இரசாயன பசளைகளை விவசாயிகளுக்கு வழங்கி, கொள்ளை இலாபமடையும் நோக்கில் இம்மோசடி இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

# அட்டாளைச்சேனையில் வர்த்தகக் கண்காட்சி



(திராய்க்கேணி நிருபர்)


இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் அட்டாளைச்சேனை பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் திகாமடுல்ல முயற்சியாண்மை வர்த்தகக் கண்காட்சி – 2022 அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் (23) இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி பாத்திமா நஹீஜா முஸப்பிரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு மேலதிக மாவட்ட செயலாளர் வி.ஜெகதீசன், பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் சாபிர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.மஜீத், நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.எம்.நளீல், கணக்காளர் ஏ.எல்.எம்.றிபாஸ், சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் அம்பாறை மாவட்ட உதவி பணிப்பாளர் ஐ.எம்.நாஸர், அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பதில் பொறுப்பாளர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட சிறு முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு, விற்பனையும் செய்யப்பட்டது.

# வாழைச்சேனை ஜெயந்தியாலை பகுதியில் கேரள கஞ்சாவுடன் வியாபாரி ஒருவர் கைது

(கனகராசா சரவணன்)



பொலன்னறுவையிலிருந்து வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள ஜெயந்தியாலை பிரதேசத்திற்கு வியாபாரத்துக்காக 2 கிலோ 40 கிராம் கேரள கஞ்சாவை கடத்திவந்த ஒருவரை ஜெயந்தியாலை பகுதியில் வைத்து நேற்று (24) பகல் 11 மணியளில் கைதுசெய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவதினமான நேற்று பகல் 11 மணிக்கு வாழைச்சேனை பொலிஸாருடன் இராணுவ புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து ஜெயந்தியாலை பிரதேசத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

இதன்போது பொலன்னறுவையிலிருந்து பொது போக்குவரத்து பஸ்ஸில் பை ஒன்றில் கேரள கஞ்சாவை மறைத்து எடுத்துக்கொண்டு ஜெயந்தியாலை பிரதேசத்தில் வந்து இறங்கி காத்திருந்தபோது அவரை இராணுவ புலனாய்வுப் பிரிவினரும் பொலிஸாரும் சுற்றிவளைத்து மடக்கிப்பிடித்து 2 கிலோ 400 கிராம் கொண்ட கேரள கஞ்சாவை மீட்டதுடன், அவரை கைதுசெய்துள்ளனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர் 42 வயதுடைய பொன்னறுவையைச் சேர்ந்தவர் எனவும் இவர் போதைப்பொருள் வியாபாரி எனவும் இவரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் சர்வதேச கல்வி நிறுவனங்களுடன் கைச்சாத்து!

(மாளிகைக்காடு நிருபர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அண்மைக்காலமாக உயர் கல்வியினை சர்வதேசமயப்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றது. பல்கலைக்கழக உபவேந்தர் பேராசியர் ஏ.றமீஸ் தலைமையில் பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. றியாட் ரூளி இதற்கான முழு முயற்சியில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகம் சர்வதேச ரீதியாக செயற்படுகின்ற பல்கலைக்கழகங்கள், கல்வி மற்றும் ஆய்வு சார்ந்த அமைப்புகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டு, அவற்றை பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதற் கான வேலைத்திட்டங்களை யும் முன்னெடுத்து வரு கின்றது.

அந்தவகையில் அண்மையில் இந்திய கல்விசார் ஆய்வு மன்றத் துடனான (Indian Academic Research Association) சந்திப்பும் உடன்படிக்கையும் கடந்த 27.09.2022ஆம் திகதியன்று இணையவழி



ஊடாக இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து நேற்று (24) KSR College of Arts & Science for Women in India நிறுவனத்தினுடனான சந்திப்பும் உடன்படிக்கையும் இணையவழி ஊடாக இடம்பெற்றன. இவ்வுடன்படிக்கைக்கான ஆரம்பகட்ட முன்னெடுப்புகளை தென்கிழக்குப் பல்கலைக்கழகப் சந்தைப்படுத்தல் முகாமைத் துவத் துறைத் தலைவர் பேராசிரியர் எம்.பீ.எம்.இஸ்மாயில் மேற்கொண்டிருந்தார். இந்நிகழ்வில் பல்கலைக்கழக உபவேந்தர், KSR College of Arts & Science for Women in India நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள் மற்றும் பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இவ்வமைப்புடனான புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் கற்றல், கற்பித்தல், ஆய்வு மற்றும் புத்தாக்கத் துறைகளில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களும் பயனடைவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்போது ஆசிரிய - மாணவ பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்கள், ஆய்வு மாநாடுகள், ஆய்வு வெளியீடுகள், சான்றிதழ் மற்றும் டிப்ளோமாக பாடநெறிகள், ஆசிரியர் மற்றும் மாணவர் பயிற்சிகள் உள்ளிட்ட பல ஒன்றிணைந்த வேலைத்திட்டங்களை துரிதகதியில் நடைமுறைப்படுத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

இதுபோன்ற புரிந்துணர்வு உடன்படிக்கை களை மேலும் விரிவுபடுத்துவதற்கு பல்கலைக் கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதன்படி ரஷ்யா, துருக்கி, மலேஷியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களுடன் எதிர்வரும் காலங்களில் மேலும் பல புரிந்துணர்வு உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

# இலங்கை – ஆப்கான் அணிகள் மோதும் ஒருநாள் தொடர் இன்று ஆரம்பம்



சுற்றுலா ஆப்கானிஸ்தான் அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான 3 போட்டிகள்கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் இன்று ஆரம்பமாகிறது.

ஹஸ்மத்துல்லாஹ் ஷாஹிதி தலைமையிலான ஆப்கானிஸ்தான் அணி ஐ.சி.சி. உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரின் ஒரு தொடராக தசுன் சானக்க தலைமையிலான இலங்கை அணியுடன் மோதுகிறது. அந்தவகையில் முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டி இன்று கண்டி, பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

2023ஆம் ஆண்டுக்கான உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரில் இதுவரை 18 போட்டிகளில் விளையாடியுள்ள இலங்கை அணி, 62 புள்ளிகளுடன் 10ஆவது இடத்திலுள்ளது. ஆப்கானிஸ்தானுக்கு எதிரான 3 போட்டிகள் உள்ள நிலையில், இன்னும் 6 போட்டிகள் மட்டுமே இலங்கைக்கு உள்ளன. இந்தப் புள்ளிப் பட்டியலில் முதல் 8 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஒருநாள் உலகக்கிண்ணத் தொடரில் பிரதான குழுவிற்கு நேரடியாகத் தகுதி பெறும். மற்ற அணிகள் தகுதிச் சுற்றுப் போட்டியில் பங்கேற்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.







ஜேர்மனியை முதல் முறையாக வீழ்த்தி வரலாற்று வெற்றியைப் பெற்ற ஜப்பான் ரசிகர்கள் போட்டி முடிந்த பிறகும் கலீபா சர்வதேச மைதானத்தை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டனர்.




விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# ரொனால்டோவுக்கு 50 ஆயிரம் பவுண் அபராதம்



ரசிகரின் கையடக்கத் தொலைபேசியை தட்டிவிட்டதற்காக நட்சத்திர வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோவிற்கு 50 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் 2 கிளப் ஆட்டத்தில் விளையாடத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த ஏப்ரலில் நடைபெற்றது. தற்போது அவர் மென்செஸ்டர் யுனைடெட் அணியிலிருந்து வெளியேறிய நிலையில் அடுத்து அவர் இணையும் கிளப்பில் இந்தத் தடை தொடரும் எனக் கூறப்பட்டுள்ளது. அபராதம் விதிப்பால் போட்டியில் பங்கேற்காத சூழல் ரொனால்டோவுக்கு ஏற்பட்டுள்ளது.

# வாயை மூடி எதிர்ப்பை வெளியிட்ட ஜேர்மனிக்கு அதிர்ச்சி கொடுத்த ஜப்பான்



ஜப்பான் அணிக்கு எதிரான போட்டியில் ஜேர்மனி வீரர்கள் குழு புகைப்படம் எடுத்தபோது ஒன் லவ் பட்டை அணிய விதிக்கப்பட்ட தடைக்கு எதிராக தங்களது வாயை மூடி எதிர்ப்பை பதிவுசெய்தனர்.

இஸ்லாமிய நாடுகளில் ஒன்றான கட்டாரில் ரசிகர்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, மதுபானம், போதைப்பொருள், உடலுறவு, ஆடைக் கட்டுப்பாடு, தன்பால் ஈர்ப்புக்கு தடை என பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதனால் வீரர்கள் பலரும் எல்.ஜி.பி.டி. பிளஸ் சமூகத்திற்கு விதிக்கப்பட்ட தடைக்கு எதிராக பேசினர். அதுமட்டுமல்லாமல், போட்டியில் களமிறங்கும்போது எல்.ஜி.பி.டி. பிளஸ் சமூகத்திற்கு ஆதரவாக கைகளில் ஒன் லவ் பட்டை அணிந்து களமிறங்கவுள்ளதாக அறிவித்தனர். ஆனால், வீரர்கள் ஒன் லவ் பட்டையுடன் களமிறங்கினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பீபா எச்சரித்தது.

இந்த எச்சரிக்கைக்குப் பின் இங்கிலாந்து, வேல்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, ஜேர்மனி, டென்மார்க் ஆகிய நாடுகள் ஒன் லவ் பட்டை அணியும் முடிவை கைவிட்டனர்.

இந்நிலையில், ஜப்பான் அணிக்கு எதிரான போட்டியில் களமிறங்கிய ஜேர்மனி அணி, ஒன் லவ் பட்டை அணிய தடை விதித்ததற்கு எதிராக தங்களது வாயை மூடி எதிர்ப்பைப் பதிவுசெய்தனர்.

இதுதொடர்பாக ஜேர்மனி உதைபந்து அமைப்பு சார்பாக ஒன் லவ் விவகாரத்தில் மற்ற நாடுகளுடன் சேர்ந்து எங்கள் குரல் கேட்கப்பட வேண்டும் என்று விரும்பினோம். இது ஓர் அரசியல் அறிக்கையை வெளியிடுவது பற்றியது அல்ல. மனித உரிமைகள் எதற்காகவும் சமரசம் செய்ய முடியாதவை. அதனால் இந்த எதிர்ப்பு எங்களுக்கு முக்கியமானதென தெரிவிக்கப்பட்டது.

குறித்த ஆட்டத்தில் ஜேர்மனி 1-2 என்ற அடிப்படையில் ஜப்பானிடம் அதிர்ச்சி தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# குற்றவாளியாக இனம் காணப்பட்ட சாமிக்கவுக்குத் தடை



அண்மையில் நிறைவுக்குவந்த 2022 இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் விதிமுறைகளை மீறி நடந்தார் என்கிற குற்றச்சாட்டில் சகலதுறை வீரர் சாமிக்க கருணாரட்னவுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட போட்டித் தடையும், 5 ஆயிரம் அமெரிக்க டொலர் அபாராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

சாமிக்க கருணாரத்ன தொடர்பில் மூன்று பேர் கொண்ட குழுவின் மூலம் விசாரணை நடத்தப்பட்டிருந்தது. இந்த விசாரணைகளின் முடிவில் சாமிக்க கருணாரட்ன குற்றவாளியாக இனம் காணப்பட்டிருப்பதோடு, அவரும் தனக்கெதிரான குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டிருக்கின்றார்.

அதன்படி தண்டனையாக தற்போது அனைத்துவகை கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட போட்டித் தடையைப் பெற்றிருக்கும் சாமிக்க கருணாரட்ன, மீண்டும் இதுபோன்ற தவறுகளை செய்யும் சந்தர்ப்பத்தில் கிரிக்கெட் போட்டிகளில் ஆட தடையைப் பெறுவார் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

# இரவுநேர மற்றும் ஞாயிறு தினங்களில் பிரத்தியேக வகுப்புகள் வேண்டாம்

## மட்டு. மாநகர முதல்வருடனான சந்திப்பில் மாணவர்கள் தெரிவிப்பு!



(கல்லடி நிருபர்)

சிறுவர்கள் மற்றும் மகளிரின் முன்மொழிவுகளைக்கொண்ட சிறந்த வரவு-செலவுத்திட்டத்தை உருவாக்கும் நோக்குடன் நேற்று முன்தினம் (23) மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் மாநகர ஒன்றுகூடல் மண்டபத்தில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இதன்போது கலந்துகொண்ட மாணவர்களால் வீதி, சிறுவர் பூங்கா மற்றும் உடற்பயிற்சி நிலையம் எனப் பல்வேறு தேவைகள் முன்வைக்கப்பட்ட போதிலும், அதில் முக்கியமாக இரவுநேர வகுப்புகளை நடத்துவதை இடைநிறுத்தல் மற்றும் ஞாயிறு தினங்களில் பிரத்தியேக வகுப்புகளை நடத்த வேண்டாம் ஆகிய முன்மொழிவுகள் மாநகர முதல்வரிடம் முன்வைக்கப்பட்டன.

தாம் இரவுவேளைகளில் பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்வதால், பல்வேறுபட்ட பாதுகாப்புப் பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும், தமக்கு ஓய்வுநேரம் கிடைப்பதில்லையெனவும், மாணவிகள் முதல்வரிடம் எடுத்துக் கூறினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்தவை வருமாறு:-

அண்மைக்காலமாக மாணவர்கள் மத்தியில் தற்கொலை செய்யும் வீதம் அதிகரிப்பு மற்றும் ஓய்வுநேரம் இன்மையால் பல்வேறு நோய்த் தாக்கங்களுக்கு உட்படுதல் போன்ற காரணங்களால் படிப்புடன் மாத்திரம் சுருங்கி, சமூகத்துடன் தொடர்பைக் குறைத்து, சமூகமயமாக்கலிலிருந்து விடுபட்ட நிலையில் வாழ்கின்றனர்.

இதன்காரணமாக உளவியல் பூரணத்துவம் அவர்களுக்கு இல்லாமல் செல்ல, அவர்களுக்கு சவால்களை எதிர்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. இவை அனைத்துக்கும் பிரத்தியேக வகுப்புகள் மட்டும்தான் காரணம் எனக் கூற முடியாது. வேறு பல காரணங்களும் இருக்கின்றன.

இந்நிலையில், மாணவர்கள் மத்தியிலிருந்து பரவலாக விடுக்கப்பட்ட ஞாயிறு வகுப்புகள் மற்றும் இரவுநேர வகுப்புகளைத் தவிர்த்தல் போன்ற வேண்டுகோள்கள் நடைமுறைப்படுத்தப்படும் போதும், அதற்குப் பிரத்தியேக வகுப்புகள் நடத்தும் ஆசிரியர்கள் ஒத்துழைப்பு வழங்கும் போதும், இதனை நடைமுறைப்படுத்தி, எமது எதிர்காலச் சமூகத்தைச் சிறந்த முறையில் உருவாக்க முடியும் - என்றார்.

இக்கலந்துரையாடலில் மாநகர ஆணையாளர் நா.மதிவண்ணன் மற்றும் மாநகர சபை உயரதிகாரிகள், மட்டக்களப்பு நகர்ப்புற பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# சுகாதார உயர் அதிகாரிகள் பிரதேச வைத்தியசாலைகளுக்கு திடீர் விஜயம்





(நூருல் ஹுதா உமர்)

ஒலுவில் பிரதேச வைத்தியசாலைக்கு இரவு நேரத்தில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் குழுவினர் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். ரிபாஸ் இவ்வறிவுறுத்தலுக்கு அமைவாக பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.அப்துல் வாஜித், தர முகாமைத்துவப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் பீ.ஜீ.பீ.டேனியல் உள்ளிட்ட குழுவினர் குறித்த வைத்தியசாலைக்கு சென்று கண்காணிப்புகளை மேற்கொண்டிருந்தனர். இவ்விஜயத்தின்போது வைத்தியசாலை உத்தியோகத்தர்களை சந்தித்து குறை நிறைகளையும் கேட்டறிந்துகொண்டதுடன் பதிவேடுகளையும் மேற்பார்வை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதன் தொடர்ச்சியாக பெரியநீலாவணை ஆரம்ப பராமரிப்பு சுகாதாரப் பிரிவிற்கும் விசேட குழுவொன்று கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தது. பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் மற்றும் ஆலோசனைகளுக்கு அமைவாக குறித்த குழுவினர் பெரியநீலாவணை வைத்தியசாலைக்குச் சென்று கண்காணிப்புகளை மேற்கொண்டதுடன், சுகாதார உத்தியோகத்தர்களிடம் குறைநிறைகளையும் கேட்டறிந்துகொண்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ.வாஜித் தலைமையிலான சுகாதார உத்தியோகத்தர்கள் குறித்த கண்காணிப்பு விஜயத்தில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் விதை மற்றும் கன்றுகள் விற்பனை நிலையம் திறப்பு







(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (23) விதை மற்றும் நடுகைப்பொருட்கள் விற்பனை நிலையம் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.எஸ்.பி.ரத்னாயக்கவால் திறந்துவைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையில் மாகாண விவசாயத் திணைக்கள நலன்புரிச் சங்கம் இதன் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது. கத்தரி, மிளகாய், வெண்டி, தக்காளி உள்ளிட்ட 10 வகையான மரக்கறி மற்றும் பழவகை விதைகள் உள்ளடங்கிய பக்கெற் 200 ரூபாவுக்கும் Tom EJC, விலாட் மற்றும் கறுத்தகொழும்பான் ஆகிய மாமரக்கன்றொன்று 350 ரூபாவுக்கும் ஏனைய மரக்கன்றுகள் 150 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் சேதனப் பசளைகள், விவசாய உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்களும் இங்கு விற்பனைக்காக விடப்படவுள்ளன.

தமக்கு அவசியமான காய்கறி மற்றும் பழவகைகளை வீட்டுத்தோட்டத்தில் உற்பத்திசெய்வதை ஊக்கப்படுத்தும் நோக்கில் இவ்விற்பனை நிலையம் திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# காத்தான்குடியில் கைக்குண்டை காட்டி கொள்ளையில் ஈடுபட்ட இருவர் கைது

(கனகராசா சரவணன்)

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள காங்கேயனோடை பிரதேசத்தில் பெறுமதியான பொருட்களை கைகுண்டை காட்டி கொள்ளையிட்டுவந்த இருவரை நேற்று முன்தினம் (23) கைக்குண்டு ஒன்றுடன் கைதுசெய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பிரதேசத்தில் தொடர்சியாக பல வீடுகளில் கைகுண்டுகளைக் காட்டி கொள்ளையர்கள் கொள்ளையில் ஈடுபட்டுவந்த சம்பவங்கள் இடம்பெற்று வந்துள்ளன. இதனையடுத்து கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி சப் இனஸ்பெக்டர் ஏ.எஸ்.றஹீம் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இதனையடுத்து சம்பவதினமான நேற்று மாலை இரு கொள்ளையர்களை கைக்குண்டுடன் கைதுசெய்ததுடன், அவர்களிடமிருந்து திருடப்பட்ட கையடக்கத் தொலைபேசிகள், 50 ஆயிரம் ரூபா பணம், வாசனைத் திரவியங்கள் உட்பட வீட்டு பாவனைப்பொருட்களை மீட்டுள்ளனர்.

இதில் கைதுசெய்யப்பட்ட இருவரையும் இன்று 24ஆம் திகதி மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## போடியார் புலம்பல்!



***மாகாண சபைத் தேர்தல் நடத்தாமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் காரணமாம் எண்டு புதிய குண்டை தூக்கி போட்டிருக்காரு எலுவா வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி!***

***இந்த நானாட கதய பாத்தா நாட்டையே இப்ப உள்ளூராட்சி தேர்தல் நடத்தாத்தும் கூட்டமைப்புத்தான் காரணம் எண்டு சொன்னாலும் ஆச்சரியம் இல்ல.***

***முழுபூசனிக்காய சோத்துக்க புதைக்கிற கத எலுவா இது.!***

# கிழக்கு மாகாண ஊடகத்துறை விருது



(அட்டாளைச்சேனை நிருபர்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மூலம் ஏற்பாடுசெய்யப்பட்ட கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சரண்யா சுதர்சன் தலைமையில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இந்நிகழ்வின்போது அட்டாளைச்சேனையைச் சேர்ந்த ஊடகவியலாளர் எம்.ஏ.றமீஸ் இரண்டு விருதுகளைப் பெற்றுக்கொண்டார்.

கிழக்கு மாகாண ஊடகத்துறை விருதையும், படைப்பாக்க புகைப்படக் கலைஞர் விருதையும் இவர் பெற்றுக்கொண்டார். கடந்த 20 வருடங்களாக ஊடகத்துறையில் இணைந்து சேவையாற்றிவரும் இவர், ஊடகத்துறைக்கான இளங்கலைஞர் விருதையும், கிழக்கு மாகாண இலக்கிய விழாவையொட்டி கிழக்கு மாகாணத்திலுள்ள அரச உத்தியோகத்தர்களிடையே நடத்தப்பட்ட படைப்பாக்கப் போட்டியில் கலந்துகொண்டு, புகைப்படக் கலைஞர் போட்டியில் முதலாமிடத்தையும்



இவர் பெற்றுக்கொண்டதனால் இதற்கான விருதும் மாகாண இலக்கிய விழாவின்போது இவருக்கு வழங்கப்பட்டது.

இதேவேளை, 2020ஆம் ஆண்டு ஊடகத்துறையில் இளம் கலைஞர் விருதுக்கு தெரிவுசெய்யப்பட்ட அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த ஊடகவியலாளர், அறிவிப்பாளர் எம்.எல்.சரிப்டீன் ஊடகத்தில் இளம் கலைஞர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# தென்கிழக்குப் பல்கலையில் ஹிதாயா மகளிர் கல்லூரி மாணவர்களுக்கு புவித்தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கு



(எம்.என்.எம்.அப்ராஸ்)

அக்கரைப்பற்று கல்வி வலயம் பாலமுனை அல்/ஹிதாயா மகளிர் கல்லூரியின் வேண்டுகோளுக்கிணங்க க.பொ.த. உயர்தரப்பிரிவில் புவியியல் பாடம் கற்கும் மாணவர்களுக்கு புவித்தகவல் தொழில்நுட்பம் தொடர்பான விசேட கருத்தரங்கு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீட கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (23) இடம்பெற்றது.

இதன்போது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புவியியற்துறையின் தலைவர் விரிவுரையாளர் கே.நிஜாமிரினால் புவியியல் கற்கையின் சமகால போக்கு, நவீன முன்னேற்றங்கள் மற்றும் எதிர்கால தொழில்வாய்ப்புகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதுடன், மேலும் பல்கலைக்கழகத்துடன் பிராந்திய பாடசாலைகள் தொடர்பின் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துரைக்கப் பட்டது.



அத்துடன், புவியியற்துறை பேராசிரியர் எம்.ஐ.எம்.கலீல் க.பொ.த. உயர்தர புவியியல் பாட உள்ளடக்கங்கள் மற்றும் பரீட்சை தொடர்பான விடயங்களை மாணவர்களுடன் பகிர்ந்துகொண்டார். புவித்தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக புவியியற்துறை விரிவுரையாளர் ஏ.எல்.ஜூப்பினால் செயன்முறை விளக்கங்களுடன் விரிவுரை இடம்பெற்றது.

மேலும், இதன்போது தென்கிழக்குப் பல்லைக் கழகத்தின் புவியியற்துறையின் ஏனைய விரிவுரையாளர்களும் கலந்துகொண்டதுடன், இறுதியாக பாடசாலையின் புவியியற்பாட ஆசிரியர் எம்.ஐ.எம்.தௌபீக் பாடசாலை சார்பில் நன்றியுரையை நிகழ்த்தினார்.

# அம்பாறை மாவட்டத்தில் வரம்பு பயிர்ச்செய்கைத் திட்டம்

(மாளிகைக்காடு நிருபர்)

2022 - 2023 கால பகுதிக்கான மகா போக நெற்செய்கையை முன்னிறுத்தி இரு முக்கியமான செயல் திட்டங்கள் காரைதீவு கமநல சேவை மத்திய நிலையத்தில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஜனாதிபதியின் சிந்தனைக்கமைய விவசாயிகளுக்கான உர மானிய வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதேபோல் ஜனாதிபதியின் தூரநோக்கை உணர்ந்து அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரால் இம்மாவட்டத்தில் பிரத்தியேக முன்மாதிரியாக வரம்பு பயிர்ச்செய்கைத் திட்டம் முன்னெடுக்கப்பட்ட வண்ணம் உள்ளது.

இரு வேலைத்திட்டங்களையும் காரைதீவின் 04 கண்டங்களையும் சேர்ந்த விவசாயிகளுக்கு அறிமுகம் செய்துவைக்கின்ற வைபவம் காரைதீவு கமநல சேவை மத்திய நிலையத்தின் பொறுப்பாளரும், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தருமான





எம்.சிதம்பரநாதன் தலைமையில் இடம்பெற்றது. இதில் பேராளர்களாக காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், அம்பாறை மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அப்துல் ஹலீஸ், மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள அம்பாறை மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சமந்த, மாகாண உதவி விவசாயப் பணிப்பாளர் ஆர்.அழகுமலர் ஆகியோருடன் விவசாயப் போதானாசிரியர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள், பயனாளிகளான விவசாயிகள் கலந்துகொண்டனர்.

எம்.சிதம்பாநாதன் ஊடகங்கள் முன்னிலையில் பேசியபோது, இரு வேலைத்திட்டங்களும் உண்மையில் பெறுமதியானவை, வரப்பிரசாதங்கள் என்றே கூறலாம். விவசாயிகள் இத்திட்டங்களின் முழுமையான உச்ச பலனைப் பெறவேண்டும் - என்றார்.

# குச்சவெளியில் உணவு உற்பத்தியை அதிகரிக்க 4000 எலுமிச்சை மரக்கன்றுகள் வழங்கிவைப்பு





(கிண்ணியா, திருமலை நிருபர்கள்)

திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உணவு உற்பத்தி மற்றும் பசுமைப் புரட்சிக்கான கொள்கை பிரகடனத்திற்கமைய இரண்டு கிராமசேவகர் பிரிவில் (பெரியகுளம், இக்பால்நகர்) வசிக்கும் குடும்பங்களுக்கு 4000 எலுமிச்சை மரக்கன்றுகள் நேற்று முன்தினம் (23) வழங்கப்பட்டன.

குச்சவெளி பகுதியின் மண் வளமானது குறித்த பயிர்ச்செய்கைக்கு உகந்தது. இதனால் அப்பகுதி மக்களை உணவு உற்பத்தியிலும் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் நோக்கிலும் இவ்வாறான திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்த பிரதேச செயலாளர் முஸ்லிம் எயிட் நிறுவனத்துக்கு கோரிக்கை விடுத்திருந்தார்.

முஸ்லிம் எயிட் நிறுவனம் ஊடாக வழங்கப்பட்ட குறித்த நிகழ்வில் குச்சவெளி பிரதேச செயலாளர் கே.குணநிதன், கிராம அதிகாரிகள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், பள்ளி நிர்வாகிகள், கோவில் நிர்வாகிகள், பயனாளிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# உலக செய்திகள்



# மலேஷிய புதிய பிரதமராக அன்வர் இப்ராஹிம் தெரிவு

மலேஷியாவின் புதிய பிரதமராக அன்வர் இப்ராஹிமை (Anwar Ibrahim) மன்னர் அல்-சுல்தான் அப்துல்லா அறிவித்தார்.

இது தொடர்பான அறிவிப்பை மன்னர் மாளிகை வெளியிட்டது. இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைவரான அன்வர் இப்ராஹிம் மலேஷியாவின் 10ஆவது பிரதமராக நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

மலேஷிய நாடாளுமன்றத் தேர்தல் முடிவில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், புதிய பிரதமரை தெரிவுசெய்வதில் இழுபறிநிலை நீடித்துவந்தது. மன்னரின் தலையீட்டால் தற்போது புதிய பிரதமர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

# உலகை அச்சுறுத்தும் அம்மை பரவல்

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

கொரோனா பாதிப்புக்குப் பின்னர் அம்மை பரவல் உலகளாவிய அச்சுறுத்தலாகப் பரவிக் கொண்டிருக்கிறது என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

இந்தியாவின் மும்பை உள்ளிட்ட பெரிய நகரங்களில் குழந்தைகளுக்கு தட்டம்மை வேகமாகப் பரவி வருகிறது. இந்நிலையில், உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் அம்மை நோய் பரவுவது குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளது. கொரோனாவால் அம்மை நோயைத் தடுக்க சொட்டுமருந்து போடுவது நிறுத்தப்பட்டு விட்டதால் அதன் பாதிப்பு தெரியவருவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் 4 கோடி குழந்தைகளுக்கு தடுப்பு மருந்தைத் தவறவிட்டதாகவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

# குற்றமிழைத்த 12 பேருக்கு கசையடி

## தலிபான் அரசு அதிரடி



ஆப்கானிஸ்தானில் பழைய முறைப்படி, குற்றமிழைத்த 3 பெண்கள் உட்பட 12 பேருக்கு பொது இடத்தில் வைத்து கசையடி கொடுத்து தண்டனையை நிறைவற்றியுள்ளது தலிபான் அரசு.

ஆப்கானில் இஸ்லாமிய ஷரியா சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ள தலிபான்கள், 90களில் கடைபிடித்த அதேவகையான தண்டனை முறையை மீண்டும் அமுல்படுத்தியுள்ளனர்.

குற்றவாளிகளுக்கு கசையடி கொடுக்கும் நிகழ்ச்சியைக் காண வருமாறு முஜாயிதீன், மூத்த மற்றும் பழங்குடித் தலைவர்கள், உள்ளூர் மக்கள் ஆகியோருக்கு லோகார் மாகாண ஆளுநர் அலுவலகம் அழைப்பு விடுத்திருந்தது.

ஒவ்வொருவருக்கும் 21 முதல் 39 கசையடிகள் கொடுக்கப்பட்டு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

# கொரோனாவின் பிடிக்குள் சீனா: ஒரே நாளில் 31ஆயிரம் பேருக்கு தொற்று!

## கெடுபிடிகளால் மக்கள் அதிருப்தி; போராட்டத்தில் குதிப்பு



சீனாவில் ஒரே நாளில் 31 ஆயிரம் பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டது. இந்நிலையில், கொரோனா பாதித்த பகுதிகளில் சீன அரசு கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்க, அதனை எதிர்த்து மக்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

சீனாவில் நேற்று ஒரே நாளில் 31 ஆயிரத்து 454 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் 25,517 பேருக்கு அறிகுறி இல்லாமல் தொற்று உறுதியானது. ஆறு மாதங்களின் பின்னர் சீனாவில் இதுவரை கொரோனாவால் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 2019 டிசம்பர் மாதம் சீனாவின் வூஹான் மாகாணத்தில் கொவிட்-19 தொற்று கண்டறியப்பட்டது. உலகம் முழுவதும் கொரோனா தாக்கம் படிப்படியாகக் குறைந்துவரும் நிலையில், சீனாவில் அண்மைக்காலத்தில் மிக அதிகமாக ஒரு நாள் பாதிப்பு பதிவாகியுள்ளது.

'ஸீரோ கொவிட்' என்ற இலக்குடன் நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் சீன அரசு, தொற்று கண்டறியப்பட்ட பகுதிகளில் கடுமையான கட்டுப்பாடுகளை அமுல்படுத்த முயற்சிக்கிறது. ஆனால், கொரோனா வீரியம் குறைந்த நிலையிலும் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் அளவில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். குறிப்பாக, சீனாவின் ஐபோன் தயாரிப்பு ஆலை அமைந்துள்ள செங்சோவ் பகுதியில் பொலிஸாருக்கும் ஊழியர்களுக்கும் இடையே கடும் போராட்டம் வெடித்தது. கொரோனாவால் விடுப்பில் சென்றவர்களுக்குப் பதிலாக வேறு பணியாட்களை நியமிக்கக் கண்டனம் தெரிவித்துப் போராட்டம் வெடித்தது.



## 275ஆவது நாளாகவும் தொடரும் போர்

# உக்ரைன் மருத்துவமனை மின்நிலையம் மீது ரஷ்யா வான் தாக்குதல்



## பச்சிளம் குழந்தை உட்பட 7 பேர் பரிதாபப் பலி

உக்ரைன் மீது ரஷ்யப் படை மேற்கொண்ட வான் தாக்குதலில் பச்சிளம் குழந்தை உட்பட 7 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 11 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர்த் தொடுத்தது. இப்போர் இன்று 275ஆவது நாளாகவும் நீடித்து வருகிறது. ரஷ்யத் தாக்குதலால் உக்ரைன் தலைநகர் கீவ், இரண்டாவது பெரிய நகரான கார்கீவ், மரியுபோல் உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் உருக்குலைந்துள்ளதுடன், உக்ரைனின் உட்கட்டமைப்பு வசதிகள் சீரிழந்துள்ளன. அத்தோடு 15.5 மில்லியன் மக்கள் உக்ரைனிலிருந்து வெளியேறி அண்டைநாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

போரால் உருக்குலைந்துள்ள உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் உதவி வருவதால் ரஷ்யா கைப்பற்றிய நகரங்களை ஒவ்வொன்றாக மீட்டு வருகிறது.

இந்நிலையில், ரஷ்யா மீண்டும் உக்ரைன் மீதான தாக்குதல்களை கடுமையாக்கியுள்ளது.

**பச்சிளம் குழந்தை பலி**

நேற்று முன்தினம் தென்கிழக்கு உக்ரைனிலுள்ள வில்னியன்ஸ்க் நகரில் மகப்பேறு மருத்துவமனையின் மீது ரஷ்யப் படைகள் நடத்திய தாக்குதலில் பச்சிளங்குழந்தை உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நள்ளிரவில் ரஷ்யப் படைகள் ஏவுகணைகளை ஏவி நடத்திய வான்வழித் தாக்குதலில் மகப்பேறு மருத்துவமனை கட்டடம் இடிந்து தரைமட்டமானது.

இடிபாடுகளில் சிக்கிக்கொண்ட குழந்தையின் தாயையும், மருத்துவரையும் மீட்புக்குழுவினர் போராடி மீட்டனர்.

இதேபோல், கீவ்வின் மின்சார நிலையங்களை குறிவைத்து ரஷ்யா அடுத்தடுத்து தாக்குதல்களை நடத்தியது. இத்தாக்குதலில் கட்டடம் இடிந்து 6 பேர் உயிரிழந்துள்ளனர். மின் துண்டிக்கப்பட்டுள்ளதால் உக்ரைனின் பல நகரங்கள் இருளில் மூழ்கியுள்ளன.

# இந்தோனேஷிய நிலநடுக்கம்: இடிபாடுகளிருந்து சிக்கிய சிறுவன் 2 நாட்களின் பின் உயிருடன் மீட்பு

## ஐந்தாவது நாளாகவும் தொடரும் மீட்புப் பணிகள்





இந்தோனேஷியாவில் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட இடிபாடுகளில் சிக்கிய இரண்டு நாட்களின் பின்னர் 6 வயது சிறுவயொருவன் உயிருடன் மீட்கப்பட்டுள்ளான்.

இந்தோனேஷியாவின் மேற்கு ஜாவா மாகாணம், சியாஞ்சூர் பகுதியில் திங்கட்கிழமை ஏற்பட்ட 5.6ரிச்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து தரைமட்டமாகியுள்ளதுடன் 50ஆயிரத்தக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.

இந்நிலநடுக்கத்தில் சிக்கி இதுவரை 271 பேர் உயிரிழந்துள்ளதுடன், 2,000இற்கும் மேற்பட்டோர் இடிபாடுகளிலிருந்து காயங்களுடன் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும், கடந்த மூன்று நாட்களாக காணாமல்போன 150 பேரை தேடும் பணியில் மீட்புப் படையினர் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நாக்ரக் என்ற கிராமத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடிபாடுகளில் சிக்கியிருந்த சடலத்தை மீட்புப் படையினர் மீட்கும்போது சடலத்திற்கு கீழே அஸ்கா மௌலானா மாலிக் என்ற 6 வயதுச் சிறுவன் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

இரண்டு நாட்களாக உணவு, தண்ணீர் இல்லாமல் அவரது பாட்டியின் சடலத்திற்கு கீழே இருந்த சிறுவன் உயிருடன் மீட்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உயிருடன் மீட்கப்பட்ட சிறுவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் நிலையில், மேலும் பலர் உயிருடன் இருக்கக்கூடும் என்ற நம்பிக்கையுடன் மீட்புப் படையினர் மீட்புப் பணியை தொடர்ந்துள்ளனர்.

# அடடா இப்படி ஒரு கிராமமா?

# தேர்தல் பிரசாரத்துக்குத் தடை; வாக்களிக்காவிட்டால் அபராதம்

## போஸ்டர் இல்லை: கட்சி கொடியில்லை; ஆச்சரியத்தின் விளிம்பில் குஜராத் கிராமம்






குஜராத்தில் தேர்தல் பிரசாரத்திற்கு தடையும், வாக்களிக்காத மக்களுக்கு அபராதமும் விதிக்கும் விநோத கிராமம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

182 தொகுதிகளைக்கொண்ட குஜராத் சட்டப்பேரவைத் தேர்தல் அடுத்த மாதம் முதலாம் மற்றும் ஐந்தாம் திகதிகளில் இரு கட்டங்களாக நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் வெற்றிபெற ஆளும் பா.ஜ.கவும், காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட பிரதான கட்சிகள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

தேசிய கட்சித் தலைவர்கள் முதல் சுயேச்சை வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் வரை குஜராத்தின் மூலை, முடுக்கெல்லாம் மக்களை சந்தித்து வாக்கு சேகரித்து வருகின்றனர்.

ஆனால், அதே குஜராத் மாநிலத்துக்குள் இருக்கும் சமாதியாலா என்ற கிராமத்துக்குள் சென்றால், ஒரு போஸ்டர் இல்லை, பேனர் இல்லை. பேரணிக் கூட்டம் நடத்தி போக்குவரத்து நெரிசலை உருவாக்கவில்லை. ஓர் அரசியல் கட்சிக் கொடி கூட பறக்கவில்லை. காரணம், பற்றி அறிந்தபோது ஆச்சரியம்தான் ஏற்பட்டது.

குஜராத் மாநிலம் ராஜ்கோட் நகரிலிருந்து 20 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ராஜ் சமாதியாலா கிராமத்தில் 1983ஆம் ஆண்டுமுதல் அரசியல் கட்சியினர் பிரசாரம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. மக்கள் யாருடைய பேச்சை கேட்டும் ஏமாற்றமடையாமல் தன்னிச்சையாக முடிவெடுத்து வாக்களிப்பதற்காக இந்த முடிவு அமுல்படுத்தப்பட்டுள்ளதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு நிறுத்திக்கொள்ளாமல், 100 சதவிகித வாக்கை பதிவுசெய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் வாக்களிக்காத கிராம மக்களுக்கு ரூ. 51 அபராதமும் விதிக்கப்படுகிறது. இதுவரை 100 சதவீத வாக்குப்பதிவை உறுதிசெய்ய தேர்தல் ஆணையமும் மத்திய அரசும் பல்வேறு யோசனைகளை செய்துவரும் நிலையில், பல ஆண்டுகளுக்கு முன்பே ஒரு கிராமம் தன்னிச்சையாக 100 சதவீத வாக்குப்பதிவை உறுதிசெய்ய வழிகண்டுள்ளது நிச்சயம் வியப்பை அளிக்கத்தான் செய்கிறது.

எப்போதோ நடக்கும் தேர்தலுக்கே இவ்வளவு கட்டுப்பாடுகள் என்றால், பொதுவான விடயங்களில் மட்டும் கோட்டை விட்டுவிடுவார்களா என்ன?

குப்பை மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களை பொதுவெளியில் போட்டால் ரூ. 51, குட்கா உபயோகித்தால் ரூ. 51, மது அருந்தினால் ரூ. 500, பொய் சாட்சி கூறினால் ரூ. 251, மரம் வெட்டினால் ரூ. 500 என அபராத பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது. ஆனால், இந்த அபராதங்களுக்கு எல்லாம் பெரியளவில் வேலையே இல்லை என்று சொல்லும் அளவுக்கு கிராமம் பக்காவாக இயங்குகிறது.

1,700 பேர் வசிக்கும் இந்த சிறு கிராமத்தில், மக்கள் ஒன்றிணைந்து ஒரு குழுவை தெரிவுசெய்து அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் அவர்களே ஏற்படுத்திக்கொள்கின்றனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7